பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 31 புதன்கிழமை (15.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 231

# போருக்குப் பின்னரான இலங்கை நிலைமை; உலகத் தலைவர்களுக்கு ஜனாதிபதி விளக்குவார்

## எகிப்தில் நடைபெறும் அணிசேரா மாநாட்டு வேளையில்

கொழும்பு, ஜூலை 15

எகிப்தின் சாரம் எல்- ஷெய்க் நகரில் நடைபெறவிருக்கும் அணிசேரா நாடுகளின் பதினைந்தாவது உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் கொழும்பிலிருந்து புறப்பட்டார்.

மாநாட்டு நாள்களில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உட்படப் பல்வேறு நாடுகளின் தலைவர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்திருப்பதை அடுத்து தமது அரசு முன்னெடுக்க உத்தேசித்துள்ள அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான தனது உத்தேசத் திட்டங்களை அவர்களுக்கு விளக்குவார் என்று கூறப்படுகின்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எகிப்தில் மகத்தான வரவேற்பு

கொழும்பு, ஜூலை 15

அணிசேரா நாடுகளின் 15ஆவது உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று எகிப்துக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஷாம் அஷ்ஷேக் சர்வதேச விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது

இலங்கை நேரப்படி நேற்றுப் பிற்பகல் 4.30 மணிக்கு ஜனாதிபதி எகிப்து சென்றடைந்தார். எகிப்தின் சுற்றாடல் அமைச்சர் மாஜித் ஜியோஜ் ஜனாதிபதியையும் குழு

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாத்தமைக்கான விருது 'உதயனு'க்கு

### நேற்று கொழும்பு ஊடக விழாவில் விசேட கௌரவம்

கொழும்பு, ஜூலை 15

இலங்கையில் பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாத்தற்கான அதிஉயர் கௌரவ விருது 'உதயன்'பத்திரிகைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இதழியல் துறையில் சிறந்த செயற்பாடுகளுக்கான விருது வழங்கும் விழா கொழும்பில் நேற்று இடம்பெற்ற போது 'உதயன்' நிறுவனத்துக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்

(16ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடர்

உள்ளே

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

நாளை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்



முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் ஜெனரல் சரத் பொன்சேகா, புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூர்யவை வரவேற்பதைக் காணலாம்.

## 'அக்ஷன் பாய்ம்' பணியாளர் படுகொலை விசாரணை சாட்சியங்களுக்குப் பாதுகாப்பு இல்லாததால் பாதிப்பு

### விசாரணைக்குழுவின் தலைவர் கருத்து

கொழும்பு, ஜூலை 15

''சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாமையால் பிரான்ஸ் அரச சார்பற்ற அமைப் பான'அக்ஷன் பெய்ம்' பணியாளர்கள் 17 பேர் மூதூரில் கொல்லப்பட்டமை குறித்த விசாரணைகள் பாதிக்கப்பட்டன.

- இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான நிஷாங்க உடலகம தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிளஸ், மைனஸ் கதைகளை விட்டுவிட்டு தமிழர்களுக்குரிய தீர்வை முன்வைக்குக!



### மனோ கணேசன் எம்.பி. சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 15

''ஜனாதிபதி இந்தியாவுக்குச் சென்றால் 13 ஆவது சட்டத் திருத்தத்திற்கு அப்பாலும் அதிகாரங்கள் வழங்கப்படும் எனவும் (தேர்டீன் பிளஸ், பிளஸ்) என்கிறார். உள்நாட்டுக்கு வந்து பங்காளிக் கட்சிகளுடன் சேர்ந்துகொண்டு 13 ஆவது சட்டத்திற்குக் குறைவாகவே அதிகாரங்கள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் மக்களின் உயிரிழப்புக் குறித்து ஐ.நா. அலட்சியமாக நடந்துகொண்டதா?

### இல்லை என மறுக்கின்றார் செயலாளர் நாயகம் மூன்

நியூயோர்க், ஜூலை 15

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் இறுதிக் காலகட்டத்தில் பொதுமக்களுக்குப் பெருமளவு உயிரிழப்புகள் ஏற்படலாம் எனத் தெரிந்திருந்தும் ஐ.நா. அதனை அலட்சியம் செய்தது என்ற குற்றச்சாட்டை செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நிராகரித்துள்ளார்.

இக்குற்றச்சாட்டு முற்றிலும் பிழையானது. நாங்கள் அலட்சியம் செய்யவில்லை; குறைத்து மதிப்பிடவில்லை; என்னை இதில் குற்றம்சாட்டக்கூடாது.

- இவ்வாறு நியூயோர்க்கில்'வோல் ஸ்ரீட்' பத்திரிகையின் ஆசிரியர்கள், செய்தியாளருக்கு அளித்த பேட்



(15ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று மௌன ஊர்வலம்

கொழும்பு, ஜூலை 15

வவுனியா 7ஆம் நாள் திருச்சபையால் நடத்தப்படுகின்ற சர்வதேசப் பாடசாலையின் போதகர் நகுலேஸ்வரன் இராசலிங்கம் காணாமற்போன தகவலைத் தெரிவிக்க வேண்டி நேற்று அப்பாடசாலைச் சமூகத்

(16ஆம் பக்கம் பார்க்க)

இடமாற்றம் த.சாரிக்கா லேனர்ஸ்



கந்தப்பசேகர வீதியில் இருந்து 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
(யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் முன்பாக) இடமாற்றம்செய்யப்பட்டுள்ளது.

7 ஆவது வருடப் பூர்த்தியை முன்னிட்டு 15.07.2009 -30.08.2009 வரைக்கும் அதிரடி ஆடிக் கழிவு 1000 ரூபா.
அதிசிறந்த முறையிலான வாகனப் பயிற்சி, மிகவும் விளக்கமான முறையில் வகுப்புகள், பரீட்சைகள்.
திருப்தியான முறையில்செய்து விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.



நிர்வாகி: திரு.போல் பொனிபஸ் (சாரதிப் பயிற்சியாளர் ) தொலைபேசி இல. 0776140361

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Be a
VISUAL BASIC Programmer

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

Diploma In Advanced Software Technology
Visual Basic, Oracle & Project — Duration : 4 Months

Diploma in Computerized Accounting — Duration : 3 Months
Diploma in Web Design & Development — Duration : 3 Months
Diploma in Digital Pre-Press
Duration 3 Months
Dip. in Digital Video Production (Audio & Video Editing)

டிப்ளோமா சான்றிதழ்கள் CSC-இந்திய உயர்கல்வி நிலையத்தால் வழங்கப்படும்

ASIAN - CSC COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. 077-3122198



## ஏலவிற்பனை நடைபெறமாட்டாது

வீட்டுடன் கூடிய காணி ஏலவிற்பனை பிற்போடப்பட்டுள்ளது

இலங்கை வங்கி - திருநெல்வேலி

சின்னமுத்துத்தம்பி வித்தியாசாலைக்கு முன்பாக இலக்கம் 116/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி , யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த வீட்டுடன் கூடிய காணியின் ஏலவிற்பனை 2009.07.18 ஆம் திகதியன்று நடைபெறமாட்டாது.

ஏலதாரர் : க.பொ. பாலக்கிருஷ்ணன்,
அதிகாரமளிக்கப்பட்ட ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்,
692, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

முகாமையாளர்: இ.பிரேமராஜன்,
இலங்கை வங்கி,
திருநெல்வேலி.



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு
அரசடி சனசமூக நிலையத்தின் ஆதரவில்
வலி.தென்மேற்கு பிரதேச சபையின்
பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் நடத்தும்

## நடமாடும் சேவையும் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாமும்

இடம் :- அரசடி சனசமூக நிலையம்
காலம் :- நாளை (16.07.2009) வியாழக்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை

தலைவர்
திருமதி.பு.சிவலிங்கம் - செயலாளர், பிரதேச சபை, வலி.தென்மேற்கு

பிரதம விருந்தினர்
Dr.டினேஸ் ஜெயக்குமார்
சுகாதார வைத்திய அதிகாரி, மானிப்பாய்

சிறப்பு விருந்தினர்:
Dr.K.சிவராசா,
பொறுப்பதிகாரி,
கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை,
பண்டத்தரிப்பு.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி சனசமூக நிலையம்,
பண்டத்தரிப்பு.
ஏற்பாட்டாளர்கள்.

விளம்பர அனுசரணை
VASANTHAM INSTITUTE PANDATERUPPU
SHARAVANAS STUDIO VADALIYADAIPPU


## மரண அறிவித்தல்

### மருதர் அமிர்தலிங்கம் (காந்தி)



அச்சுவேலி, நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும் இணுவில் றோட், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மருதர் அமிர்தலிங்கம் நேற்று (14.07.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதர் - அமுதம் தம்பதியினரின் அன்பு மகனும், துரையம்மா, இராசம்மா, வெற்றிவேல் காலஞ்சென்ற இலட்சுமியம்மா, ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஐங்கரனின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2009) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் றோட்,*
*மானிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## ஆசியப் பல்கலை அனுமதி - நேர்முகப் பரீட்சை 18 இல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

சேவாலங்கா நிறுவனம் ஊடாக ஆசியப் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 18ஆம், 19 ஆம் திகதிகளில் நிறுவனத்தின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

சாருஜன் செல்வராஜா - கொழும்புத்துறை, அபிராமி அமிர்தலிங்கம் - கோப்பாய் வடக்கு,சொறுபிகா குணதிலபம் - சில்லாவை மேற்கு, மேகலா சமேஸ்வரன் - தொல்புரம் கிழக்கு, அனுசானி அழகராஜா - சுண்டிக்குளி, டஷிகா தேவராஜா- கொக்குவில் கிழக்கு, சொப்னியா ஜீவநாதன் - அரியாலை மேற்கு, சுகந்தா பரமா நந்தன் - நல்லூர் வடக்கு, டர்சினி நட ராஜா- சங்கானை, சம்சினி கேதீஸ்வரன் - 1943/9, பிக்கறிங் வீதி, டியூறோ கோட், கொழும்பு.

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இருவேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்த இருவர் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நகரப்பகுதியில் காலை 8.30 மணியளவில் இராணுவ டிரக்குடன் மோதிக் காயமடைந்ததாக செல்லன் சுப்பிரமணியம் (வயது 59) என்பவரும் - ஊரெழுப் பகுதியில் எரு ஏற்றிச் சென்ற லான்ட் மாஸ்டரில் பயணித்த போது தவறி வீழ்ந்து கைமுறிந்த நிலையில் சந்திரசீலன் (வயது 16) என்பவரும் - யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (1)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 15

மட்டுவில் வடக்கு சபீனா முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி இன்று பிற் பகல் 2 மணிக்கு மட்டுவில் தமிழ்க்கல வன் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யேசுசபைகளின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ரி.எட்வின் அடிகள் கலந்து கொள்வார். (1)

## அல்லைப்பிட்டியில் இன்று திருப்பலி

யாழ்ப்பாணம், ஜூலை 15

அல்லைப்பிட்டி உத்தரிய மாதா ஆலய திருவிழாவில் இன்று மாலை 5 மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சுருப பவனியும் ஆசீரும் இடம்பெறவுள்ளன.

கடந்த 7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருவிழாவில் தின மும் நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று வந்தன. (1)


## தவறிவிட்டது

சங்கரப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா என்பவரது சாதகக்குறிப்புப் புத்தகம் (13.07.2009) அன்று உரும்பிராய்ச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் 060 221 1988, 0779587334 ஆகிய தொ.பே. இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு வாடகைக்கு

நெல்லியடி, திருமகள் சோதி வீதி, பிரதானவீதிக்கு அண்மையில் சலக வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (அலுவலக பாவனைக்கு உகந்தது.)

0772487228, 0779742042

## வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் பாதுகாப்பான அமைதியான சூழலில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு சகல வசதிகளுடன் கூடிய அறைகள் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0772487228, 0779742042

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுக்கூரை ஓடுகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 155, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். தொ.பே.இல. 222 9945

## தேவை

Dialog Distributors - Vadamaradchi

எமது நிறுவனத்திற்கு கணனி அனுபவம் உள்ள ஆண்/பெண் பணியாளர்கள் தேவை.(நெல்லியடி நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

உங்கள் சுயவிவரக்கோவையை E.Mail:- nsk.kumaran.gmail.com அல்லது கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும்.

Dialog Distributors - Vadamaradchi
[illegible]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி தில்லைநாதர் இரத்தினம்

கரணவாய், நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதர் இரத்தினம் நேற்று (14.07.2009) செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற தில்லைநாதரின் அன்பு மனைவியும் புஸ்பராணி (சுவிஸ்), கெங்காதேவி, செந்திநாதன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்), தெய்வநாயகி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலகிருஷ்ணன், சிற்றம்பலம், கலாவதி, சிவராமலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் இராகுலன், பாலாம்பிகை, கோசல்யா, சுகல்யா, நர்த்தனன், மாதங்கி, சுதன், காஞ்சனா, சுகுமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விதுர்ஷன், வியாசன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2009) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அவரது குடும்ப இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
தி.செந்திநாதன்
(மகன்).

### திருமதி செல்வமணி லூசியா லீயோ
(ஓய்வுபெற்ற ஆசிரியை)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி லுசியா லீயோ 13.07.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை லீயோவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - சிசிலியா தம்பதியினரின் அன்பு மருமகளும்,ஜோய் லொறிற்றா (ஆசிரியை, கொ/மட்டக்குழி இந்துக் கல்லூரி), யோகமலர் ஆகியோரின் அன்புத் தாயும், ஜேக்கப் ராசகுமாரின் அன்பு மாமியாரும், சரோன்லியோனி, நீற்றாலியோறின்,சரோன்ஏஞ்சல், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நவரத்தினமணி(ஓய்வுபெற்ற ஆசிரியை, திருகோணமலை), கனகரட்ணம் (பெல்ஜியம்), தங்கரட்ணம், நாகரட்ணம் (ஜேர்மனி), காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் இராஜரட்ணம் (கனடா), அழகரட்ணம் (லண்டன்), சற்குணானந்தரட்ணம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நீற்றம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (16.07.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*

தகவல்: ராசகுமார் யோகமலர்
(மகள்).

### திருமதி கதிராசிப்பிள்ளை நல்லதம்பி



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிராசிப்பிள்ளை நல்லதம்பி நேற்று (14.07.2009) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நல்லதம்பியின் மனைவியும், அரியபுத்திரர் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் தியாகராசா, நாகம்மா காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி ஆகியோரின் சகோதரியும், சரஸ்வதி, நவமணி, துரைராசா (முகாமையாளர், மக்கள் வங்கி, சங்கானை), கனகேஸ்வரி, யோகவதி (திருமலை), சந்திரவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுரு, தனிநாயகம் (இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்), இரஞ்சிதமலர் துரைராசா (மக்கள் வங்கி உத்தியோகத்தர்), அமிர்தலிங்கம், தங்கராசா (திருமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமராவதி (பிரதேசசபை), அம்பிகாவதி (ஆசிரியர்), தயாபரன், யோகேஸ்வரி, கமலதாஸ், அமலதாஸ் (ஆசிரியர், நெடுந்தீவு சைவப்பிரகாசா வித்தியாலயம்), சிவதாஸ் (விளையாட்டுத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), தமயந்தி (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), தாரணி (வர்த்தகபீடம், யாழ்ப்பாணம்), இரஜீவன் (மருத்துவபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), துஜீவன் (பொறியியல்பீடம், ஊவாவெலச, பதுளை, பல்கலைக்கழகம்), அமிர்தகரன், பிரபாகரன் (கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), கங்காகரன், விஜயரூபா, தவகரன், செந்தூரன், தனுஷா, துஜீவா, சிந்துயன், நிஷாந்தன், நிஷா ஆகியோரின் பேர்த்தியும், பிரகாசினி, கோபி, கலைக்குமரன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.07.2009) புதன்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 86, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
ந.துரைராசா (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மற்றொரு ஆணைக்குழுவின் முடிவு

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.' (Justice not only be done, but also appear to be done) என்ற முதுமொழி ஒன்று உண்டு.

நிலைநாட்டப்படும் நீதி, ஒழுங்கு முறையானது, நியாய பூர்வமானது, நீதியின் பால்பட்டது என்பது வெளிப்படுத்தப்பட்டால்தான் நிலைநாட்டப்படும் நீதிக்கும் மரியாதையும், கௌரவமும் கிட்டும்.

மிக மோசமான பதினேழு மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டு விடயத்திலும் இந்த ஆன்றோர் மொழியை சுட்டிக்காட்டுவது அவசியமாகின்றது.

இலங்கையில் ஒரு பண்பியல்பு உண்டு. ஒரு பாரிய பிரச்சினைக்கு முகம் கொடாது தட்டிக்கழிக்க விரும்பினால் ஓர் ஆணைக்குழுவையோ, விசாரணை அமைப்பையோ நிறுவி, அதன் பெயரால் காலத்தை இழுத்தடிப்பது. அந்தப் பிரச்சினையின் தீவிரம் தணிந்து, அது மலினப்படும் வரை, விசாரணைக் குழு என்ற பந்தாவைக் காட்டி சமாளிப்பது. பொதுவாக இத் தேசத்தில் காலம் காலமாக அரசியல் தலைமைகளினால் கையாளப்படும் பிரதான தந்திரோபாயம் - யுக்தி - பாரம்பரிய வழிமுறை - இதுதான்.

வன்னி யுத்தம் தீவிரம் அடைவதற்கு முன்னர் அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கண்மண் தெரியாமல் இடம்பெற்ற மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பெரும் எதிர்ப்பு அலைகள் ஆட்சித் தரப்புக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த போது, அதைச் சமாளிக்கவும் வழமைபோல இதேமாதிரியான விசாரணை ஆணைக்குழுத் தந்திரமே பயன்படுத்தப்பட்டது.

மூதூரில் தொண்டுப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை, திருகோணமலை நகரில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை, அரசியல்வாதிகளான வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பி., ரவிராஜ் எம்.பி. ஆகியோர் படுகொலை, கெப்பிடிக் கொலாவையில் பயணிகள் பஸ் மீதான கிளைமோர்த் தாக்குதலில் 58 அப்பாவிப் பயணிகள் படுகொலை செய்யப்பட்டமை போன்ற பதினேழு மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் ஒரு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் நிஸங்க உடலகம தலைமையில் எட்டுஆணையாளர்களைக் கொண்டதாக அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் விசாரணை சுமார் இரண்டு வருடகால இழுபறிக்குப் பின்னர் அரைகுறைப் பிரசவமாக முடிவுக்கு வந்திருக்கின்றது.

இந்தப் பதினேழு சம்பவங்களில் ஓரிரு விடயங்கள் குறித்து மட்டும் மிகுந்த நீண்ட கால இழுபறி, பிடுங்குப்பாடுகளுக்கு மத்தியில் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தியிருந்த சூழ்நிலையில், குழுவின் ஆயுட்காலத்தைத் தொடர்ந்து நீடிக்க ஜனாதிபதி அனுமதிக்காததனால் குழு அரைகுறைப் பணியோடு காலாவதியாகியிருக்கின்றது.

அந்தக் காலகட்டத்தில் எழுந்த அழுத்தங்களைச் சமாளித்து எதிர்கொள்வதற்காக இந்தக் குழுவை அமைத்த அரசுத் தலைமை, அந்தப் பிரச்சினை அதன் மூலம் சமாளித்து அடக்கப்பட்ட சூழ்நிலையில் - தேவை முடிந்து விட்டது எனக் கருதியோ என்னவோ - ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை முடிச்சுப் போட்டுக் கட்டி முடிக்க முடிவு செய்துவிட்டது.

உரிய விசாரணைகளில் பூர்வாங்கக் கட்டத்தைக் கூடத் தாண்டாத நிலையில் ஆணைக்குழு , இப்போது தனது அறிக்கை ஒன்றை சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதில், பதினேழு தொண்டுப்பணியாளர்கள் படுகொலை மற்றும் திருகோணமலை நகரில் ஐந்து அப்பாவி மாணவர்கள் படுகொலை போன்ற சம்பவங்களின் குற்றப் பொறுப்பிலிருந்து கடற்படை மற்றும் இராணுவம் விடுவிக்கப்பட்டிருப்பதாகப் பீற்றிக் கொள்ளும் தகவல்கள் தெற்கிலிருந்து வெளியாகியிருக்கின்றன.

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பது மாதிரி, ஏதோ ஒரு தரப்புக்கு நற்சான்றிதழ் பெற்றுக்கொடுக்க மேற்படி ஆணைக்குழுவின் அறிக்கையை சாட்சியமாகப் பயன்படுத்தும் எத்தனம் இடம்பெறுகின்றது.

ஏற்கனவே இந்த ஆணைக்குழுவின் செயற்பாடு சர்வதேச ரீதியில் சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்திருப்பது பரகசியம்.

இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்ட போதே, அது நீதி, நியாயமாகச் செயற்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்புக்குழு ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது. சுமார் ஒரு வருட காலம் இந்த ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் இடைவிடாது நோட்டமிட்ட சர்வதேசப் பிரமுகர்கள் குழு இந்த ஆணைக்குழுவின் பொறுப்பற்ற போக்கிலும், நெறியற்ற நோக்கிலும் நம்பிக்கை இழந்து, விசனமுற்று, அதனைப் பகிரங்க அறிக்கைகள் மூலம் அம்பலப்படுத்தித் தெளிவுபடுத்தி விட்டுத் தனது மூடை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு நாட்டை விட்டே நடையைக் கட்டிவிட்டது.

அத்தகைய சீத்துவச் 'சிறப்புமிக்க' இந்த ஆணைக்குழுவின் அறிக்கையை எந்தத் தரப்புக்கேனும் நற்சான்றுப் பத்திரமாகப் பயன்படுத்த முயல்வது அர்த்தமற்றது; அபத்தமானது.

சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழுவின் நம்பிக்கையை இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் பெறத் தவறியமையும், அதன் ஆயுட்காலத்தை நீடிக்காமல் அது காலாவதியாகிவிட விடும் தீர்மானத்துக்கு ஜனாதிபதியைத் தள்ளியிருக்கக்கூடும்.

அத்தகைய் ஆணைக்குழுவின் அறிக்கையும், அதில் அடங்கியுள்ள சிபார்சுகளும் வலுவுள்ளவை என்று கருதுவதற்கு இடமேயில்லை.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கையும், முன்னைய பல ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் போல வெறுமனே கிடப்பில் போடப்பட வேண்டியதுதான் போலும்.

## யாழ்.நகரப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படாதவாறு 'கொன்ரெய்னர்களில்' இருந்து பொருள்களை இறக்க வசதி செய்க

### சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்ப்பாணத்துக்கு ஏ-9 வீதியூடாக பொருள்களை ஏற்றிவரும் 'கொன்ரெய்னர்' வாகனங்களை போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் யாழ்.நகருக்கு வெளியே தரித்து நின்று பொருள்களை இறக்குவதற்கான் ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட தரப்புகள் மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து தரைப்பாதை ஊடாக பொருள்களை ஏற்றிவரும் இந்த 'கொன்ரெய்னர்' வாகனங்கள் நகரின் மத்தியில் தரித்து நின்று பொருள்களை இறக்குவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கே.கே.எஸ்.வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகியவற்றிலேயே இந்த வாகனங்கள் கூடுதலாகத் தரித்து நின்று பொருள்களை இறக்குகின்றன. அதிலும் குறிப்பாக கே.கே.எஸ்.வீதி, கஸ்தூரியார் வீதி ஆகியவை மிகவும் ஒடுக்கமான வீதிகளாக உள்ளமையால் 'கொன்ரெய்னர்' வாகனங்கள் தரித்து நிற்கும் வேளைகளில் ஏனைய கனரக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. அத்துடன் இந்தக் 'கொன்ரெய்னர்' வாகனங்கள் நகரின் வீதிகளில் திரும்பும் வேளைகளில் சிரமப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஏ-9 வீதியூடாக யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொண்டுவரும் பணியினை செய்துவரும் இந்தக் 'கொன்ரெய்னர்' வானகங்களில் இருந்து போக்குவரத்து நெரிசலற்ற வீதிகளில் மாற்று நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டோர் மேற்கொள்ள வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (50-224)

## வேலைக்கான உணவுத் திட்டத்தில் வெள்ள வாய்க்கால்கள் திருத்தியமைப்பு

நவாலி ஜூலை15

வேலைக்கான உணவுத்திட்டத்தின் கீழ் 133 கிராம சேவையாளர் பிரிவில் நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் பற்றைகளால் சூழப்பட்டு இருந்த வெள்ளம் வழிந்தோடும் வாய்க்கால்கள் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தப்பிரிவு கிராம சேவையாளர் எ.நிசாந்தன் தலைமையில் காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை 6 மணித்தியாலயங்கள் தொடர்ச்சியாக வயோதிபர்கள், இளம் பெண்கள், நடுத்தர வயதுடையவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் இந்த வேலைத் திட்டத்தில் பங்கு பற்றுகின்றனர்.

சிலர் தமது சிறு பிள்ளைகளை தூக்கி வந்து மர நிழல்களிலும், வேலிக் கரையோரங்களிலும் இருத்திவிட்டு வேலை செய்வதை அவதானிக்க முடிகின்றது. (50- 100)

## அரச பகுப்பாய்வாளர்களின் அறிக்கை தாமதம்; 15,000 கைதிகள் சிறைகளில் தடுத்து வைப்பு

### நீதி அமைச்சரிடம் சிறைச்சாலை ஆணையாளர் முறையீடு

கொழும்பு, ஜூலை 15

அரச பகுப்பாய்வுத் திணைக்களத்திலிருந்து கிடைக்கவேண்டிய அறிக்கைகளின் தாமதத்தால் 15 ஆயிரத்து 500 கைதிகள் பிணை எடுக்க முடியாத நிலையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர்நாயகம் மேஜர் ஜெனரல் வீ.ஆர்.சில்வா புதிய நீதியமைச்சர் மலிந்த மொறகொடவிடம் முறையிட்டுள்ளார்.

போதைப்பொருள் வியாபாரம், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளில் கைதான இச் சந்தேகநபர்களில் பெரும்பாலானோர் ஆறு மாதங்களுக்கும் மேலாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் நிலைமையை நேரில் கண்டறிவதற்காகப் புதிய நீதியமைச்சர் நேற்றுமுன்தினம் அங்கு விஜயம் செய்தபோதே சிறைச்சாலை ஆணையாளர்நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் சுமார் 1.5 வீதமானோர் சிறைச்சாலைகளில் உள்ளனர் என சிறைச்சாலை ஆணையாளர்நாயகம் தெரிவித்தார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் 25 சிறைச்சாலைகளில் 31 ஆயிரத்து 653 பேர் தற்போது வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 260 பேர் மரணதண்டனைக் கைதிகள், 184 பேர் ஆயுட் தண்டனைக் கைதிகள் அடங்குகின்றனர். இவர்களில் 541 பேர் தங்களுடைய தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர் என்றும் ஆணையாளர் கூறினார்.

இக் கைதிகளில் 20 முதல் 30 வயதிற்குட்பட்டோர் 46 வீதமும், போதைப் பொருள் தொடர்பான குற்றச் சாட்டுக்களில் 36.5 வீதமானோரும், பொது இடங்களில் மதுபோதையில் நடத்தை தொடர்பான குற்றங்களுடன் தொடர்புடைய 3.6 வீதமானோரும் உள்ளனர்.

ஆயிரத்து 700 பேர் மட்டுமே தங்கக்கூடிய வெலிக்கடைச் சிறைச்சாலையில் தற்சமயம் 6 ஆயிரம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவித்த ஆணையாளர் நாயகம் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள நூற்றாண்டு பழமைவாய்ந்த சிறைச்சாலைகளை நவீன மயப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது எனவும் தெரிவித்தார்.

பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அறிக்கைகள் தாமதமாவதால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்குப் பிணை பெற்றுக்கொள்ள முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது பற்றி சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் முறைப்பாட்டுக்கு செவிமடுத்த நீதியமைச்சர், உடனடியாகப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கும் விஜயம் செய்து திணைக்களத்தின் பணிப்பாளரையும் மற்றும் உயரதிகாரிகளையும் சந்தித்து அவ்வாறான தாமதங்களை நீக்குவதற்கான வழி வகைகளை ஆராய்ந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. (சி)

## விதை உருளைக் கிழங்கு பதியுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். குடாநாட்டில் விதை உருளைக் கிழங்கு தேவைப்படும் விவசாயிகள் தங்களது தேவைகள் தொடர்பில் பதிவு செய்து கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கடும் முயற்சியின் பயனாக கடந்த வருடம் யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்க வழங்கப்பட்டிருந்தது.

இந்த வகையில் இந்த வருடம் யாழ். குடாநாட்டு விவசாயிகளின் தேவை கருதி 17, 500 மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு யாழ் குடாநாட்டிற்குக் கொண்டு வரப்படவுள்ள நிலையில் விதை உருளைக்கிழங்கு தேவைப்படும் விவசாயிகள் தங்களது தேவைகள் தொடர்பில் யாழ் தேசவள விவசாயிகள் சம்மேளனத்திடம் தங்களைப் பதிவு செய்து கொள்ளும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (1)

### நாளை

| | |
|---|---|
| ஆனி 32 | 16.07.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ. 09.39 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | பி.ப. 01.25 வரை |
| சுபநேரம்: | 07.30 - 09.00 |
| ராகுகாலம்: | 01.30 - 03.00 |

## ஆஸி. குடியுரிமை அமைச்சர் விரைவில் கொழும்பு வருவார்

கொழும்பு, ஜூலை 15

ஆஸ்திரேலியாவில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் அரசியல் தஞ்சம் கோருவோர் தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு அந்நாட்டு குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்கள் படகுகளின் மூலம் அவுஸ்திரேலியக் கரையோரங்களைச் சென்றடைகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை பெண்கள் சிறுவர் உட்பட 73 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய கடற்பரப்பைச் சென்றடைந்தனர் எனவும், குறித்த நபர்கள் தற்போது கிறிஸ்மஸ் தீவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்பது தெரிந்ததே.

இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியாவிற்குள் சட்டவிரோதமாகப் பிரவேசிப்பது குறித்து கலந்துரையாட குடிவரவு மற்றும் குடியுரிமை அமைச்சர் கிறிஸ் ஏவன்ஸ் இந்த மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என அவுஸ்திரேலியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையிலிருந்து அரசியல் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஆறு அவுஸ்திரேலிய அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கப்பல் மூலம் மருந்துப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை15

யாழ்.போதனா வைத்தியசா லைக்கு கப்பல் மூலம் மருந்துப் பொருள்கள் எடுத்துவரப்பட் டுள்ளன.

இந்த மருந்துப் பொருள்களுடன் ஒரு தொகுதி ஒட்சிசன் சிலிண்டர்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட இந்த மருந்துப் பொருள்களில் தட்டுப்பான மருந்துகள் சிலவும் வந்து சேர்ந்திருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களாக முக்கிய மருந்து வகைகளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் தட்டுப்பாடான மருந்துகளை தனியார் மருந்தகங்களில் அதிக விலைக்கு வாங்கு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்

## ஏ-9 பாதையூடாக போக்குவரத்துச் சேவை

- பொருள்கள் ஒப்படைத்து 3 நாள்களில் கிடைக்கும்
- மிகக் குறைந்த கட்டணம்
- பாதுகாப்பான போக்குவரத்துச் சேவை
- எமது நிறுவனத்திற்கு முகவரிகள் எவரும் இல்லை.
- நேரடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.




யாழ். குடாநாட்டிலிருந்து உள்ளூர் உற்பத்தி விவசாயப் பொருள்களைக் குறைந்த கட்டணத்துடன் கொழும்புக்குக் கொண்டு செல்லும் சேவை

★ தலைநகரிலும் யாழ்ப்பாணத்திலும் அலுவலகங்களைக் கொண்டு, புதிய லொறிகளுடன் செயற்படும் நூற்றுக்கு நூறு வீதம் உத்தரவாதம் அளிக்கக் கூடிய நிறுவனம்

★ இரு இடங்களிலும் தொடர்புகளைப் பேணக்கூடிய நம்பகத்தன்மை கொண்ட சேவை.

**இன்றே நாடுங்கள்; உங்கள் சேவையை உறுதிப்படுத்துங்கள்**

| | |
|---|---|
| ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ் | ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ் |
| 201,B, டாம் வீதி, கொழும்பு - 12. | 69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |
| T.P.: 0112433889, 0112435247, 0777674119 | T.P.: 021 222 2813, 021 222 4317 |

## அல்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

பிற்போடப்பட்ட மகா சபைக் கூட்டம் எதிர்வரும் 18.07.2009 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

செயலாளர்.

(சி/559550)

## 31 ஆம் நாள் நினைவு

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த

**அமரர் சபாபதி சிவசம்பு ஜெகநாதபிள்ளை (ஜெகநாதன்)**



தோற்றம் 24★10★1929

மறைவு 16★06★2009

(15 ஜூன் 2009 திங்கள் பின்னிரவு அட்டமி திதி)

பல தொழிலாளர்களை உருவாக்கி
சில முதலாளிகள் உருவாகக் காரணமானீரே
கம்யூனிஸக் கருத்துக்களால் கவரப்பட்டவரே
ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சிக்காக உழைத்தவரே
என்றும் தமிழை நேசிப்பவரே
அனைவருடனும் அன்பாகப் பழகுபவரே
ஏனோ குடும்பத்திற்கு மட்டும் விதி விலக்கானவரே
இருப்பினும் தானாடாவிட்டாலும் தசையாடும் என்பதுபோல்
எனது கைகளில் பிற்காலத்தை
இளைப்பாற வந்து இயற்கை எய்தினீரே.

உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு மகள்
ஜெ.ஜெ.பிள்ளை.

தும்பளை, பருத்தித்துறை.

(இன்று அன்னாரது நினைவாக அவரது அஸ்தி கரைக்கப்பட்ட தொண்டைமானாறு - செல்வச்சந்நிதியான் ஆலயத்தில் அந்தியேட்டிக் கிரியையும், மதிய போசனமும் நடைபெறவுள்ளன.)

## 'அருள் ஒளி' சஞ்சிகையின் ஆனி இதழ் வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை15

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்படும் 'அருள் ஒளி' சஞ்சிகையின் ஆனிமாத இதழ் வெளிவந்துள்ளது.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாவது குருபூசைத் தினச் சிறப்பு மலராக இவ்விதழ் வெளிவந்துள்ளமை விசேட அம்சமாகும்.

சஞ்சிகையில் இந்து சமயம் சார்ந்த வழமையான அம்சங்களோடு சிவத்தமிழ்ச் செல்வி பற்றிய கட்டுரைகள், கவிதைகள், நினைவுக் குறிப்புகள் என்பன பன்முகத் தன்மையோடு இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. (4)

## சண்டிலிப்பாயில் பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

நவாலி, ஜூலை15

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு மூன்று கோடி 68 லட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தெரிவித்தார்.

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் வேலைத்திட்டம் 2009 கமநெகும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (204-100)

## சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை முத்தமிழ் விழா

வண்ணை, ஜூலை15

யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை முத்தமிழ் விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகத் தமிழ்ப் பேராசான் நாகலிங்கம் குழந்தைவேலுவும் சிறப்பு விருந்தினராக 'கலாபூஷணம்' ஜி.பி.பேர்மினசும் கலந்துகொள்வார்கள்.

கலை நிகழ்வில் கவிதை, நாடகம், நாட்டிய நாடகம், நடனம், குழு இசை [illegible] நடைபெறும். (50-160)

## கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

1. பிரதான உணவகம், திருநெல்வேலி
2. பாலசிங்கம் பெண்கள் விடுதி உணவகம், திருநெல்வேலி.
3. ஆனந்தக் குமாரசாமி ஆண்கள் விடுதி உணவகம், திருநெல்வேலி.
4. இராமநாதன் நுண்கலைக் கழக உணவகம், மருதனார்மடம்.
5. மருத்துவபீட உணவகம், திருநெல்வேலி.
6. சித்த மருத்துவத் துறை உணவகம், கைதடி.

ஆகிய உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளரினால் 28.07.2009ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 1000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200/=உம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாகப் பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒவ்வொரு தனித்தனி விண்ணப்பத்திற்கும் அதற்குரிய உணவகத்தின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி/559551)

BOC

## இலங்கை வங்கி நெல்லியடிக் கிளைக்கு காணி கொள்வனவுக்கான அறிவித்தல்

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளைக்கு சொந்தக் காணியில் வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடியதாக கட்டடம் அமைக்கவுள்ளோம். எனவே இதற்குப் பொருத்தமான வெறும் காணி அல்லது கட்டடத்தை விற்க விரும்புபவர்கள் காணியின் அமைவிடம், விஸ்தீரணம், விலை என்பவற்றை வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 31.07.2009 இற்கு முன்னதாக அறியத்தரவும், காணி 3 தொடக்கம் 5 பரப்பளவுள்ளதாகவும் நெல்லியடி மத்தியை அண்மித்ததாகவும் இருத்தல் வேண்டும். மேலதிக விவரங்களுக்குத் தொலைபேசி இல. 021 222 3985 / 021 222 2735 ஐத் தொடர்பு கொள்ளவும்.

உதவிப் பொது முகாமையாளர்
(வடபிராந்தியம்).

(சி/559544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைக்கோட்டின் கீழ்உள்ள இளையோருக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் பயிற்சிகள்

## ஒன்றரை லட்சம் ரூபா இதற்கு ஒதுக்கீடு

வண்ணை, ஜூலை 15

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் ஒரு கோடி 54 லட்சத்து 46 ஆயிரம் ரூபா செலவில் பல்வகையான பயிற்சி நெறிகளைச் சங் கானை, சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழை, பருத்தித்துறை மருதங்கேணி, கரவெட்டி பிர தேச செயலர் பிரிவுகளில் வதியும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு வழங்கவுள்ளது.

நிறுவன வாழ்வாதாரத்திட்டத்தின்கீழ் சங்கானையில் 80 லட்சம் ரூபா செலவில் சுய தொழில் ஊக்குவிப்பு, ஆண் பெண்க ளுக்கான தையல் பயிற்சி மற்றும் கணனிப் பயிற்சி, வருமான அதிகரிப்புத் திட்டம்

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

என்பவற்றையும் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 22 லட்சத்து 23 ஆயிரம் செலவில் வருமான அதிகரிப்புத் திட்டம் விவசாய உப கரணங்கள் திருத்துதல் மற்றும் ஆண்க ளுக்கான தையல் பயிற்சி, வெளி இணைப்பு இயந்திரம் திருத்துதல் மற்றும் கணனி பயிற்சிகளையும் -

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் 10 லட்சத்து 21ஆயிரம் ரூபா செலவில் கைய டக்கத் தொலைபேசி திருத்துதல், வருமான அதிகரிப்புத் திட்டம் மற்றும் மோட்டார் சைக் கிள் திருத்துதல், ஸ்கிறீன் பிறிண்டிங், கணனிப் பயிற்சி போன்றவற்றையும் மேகொள்ளவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 30 லட்சத்து 89ஆயிரம் ரூபா செலவில் தையற் பயிற்சி மற்றும் வருமான அதிகரிப் புத்திட்டம், கணனிப் பயிற்சிகளையும் -

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 10 லட்சத்து 28 ஆயிரம் ரூபா செலவில் நீர் இறைக்கும் இயந்திரம், தச்சுவேலைப் பயிற்சி மற்றும் கணனிப் பயிற்சி, பயிர்ச் செய்கைக் கான நீர்த்தொட்டி என்பவற்றையும் -

கரவெட்டிச் செயலர் பிரிவில் 75 ஆயிரம் ரூபா செலவில் பற்றிக் வேலைப் பயிற் சியையும் வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (203-160)

# வடக்கின் வசந்தம் திட்ட முன் வரைபுகளை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்ட முன்வரைபுகள் ஜனாதிபதி செயலகத் திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதற்காகத் தயாரிக்கப்பட்ட வேலை விவரங்கள், உத்தேச நிதி மதிப்பீடுகள் சம் பந்தப்பட்ட அரச திணைக்களங்களினால் தத்தமது அமைச்சின் செயலாளரின் கவனத் திற்கு அனுப்பப்படவிருக்கின்றன.

இதன் மூலம் முன்னுரிமைப்படுத்தும் திட்டங்களுக்கே எதிர்காலத்தில் நிதி ஒதுக் கீடு செய்யப்படவுள்ளது.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் குடாநாட்டில் உள்ளூராட்சி மன் றங்கள், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவிற்குட்பட்ட திணைக்களங்களின் அபிவிருத்தி முன் னெடுக்கப்படுகின்ற அதேநேரம் ஏனைய அரச திணைக்களங்களின் முன் வரைவுக ளும் முன்கொண்டு செல்லப்படவுள்ளன.

அனைத்துச் செயற்பாடுகளுக்குமான துரித நடவடிக்கைகளை ஜனாதிபதிச் செய லாளர் லலித் வீரதுங்க மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை- நிதி ஒதுக்கீடு தொடர் பாக பிரதம செயலாளர், மாவட்ட செயலா ளர்கள் முன்னிலையில் விசேட கலந்து ரையாடல் அடுத்த மாத முற்பகுதியில் இடம் பெறவுள்ளன. (203- 302)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை15

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை யில் கண்புரையால் பார்வை பாதிக்கப்பட் டவர்களுக்கான இலவச பரிசோதனை இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

கண் சத்திரசிகிச்சை நிபுணர் எஸ்.குக தாசன் பரிசோதனைகளை நடத்தி சத்திர சிகிச்சை தேவைப்படுபவர்களுக்குச் சத் திர சிகிச்சை மேற்கொள்வார்.

மனிதநேயம் அமைப்பின் அனுசரணை யில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள வர்களுக்கு இப்பரிசோதனை மேற்கொள் ளப்படவுள்ளதாக வைத்தியசாலைப் பணிப் பாளர் சபை தெரிவித்தது. (1)

* * *

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கணித, விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டிலான விஞ்ஞான தினவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்றத்தலைவர் த. இந்திரபாகுலேயன் தலைமையில் பாட சாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி புண் ணியமூர்த்தி ரவிராஜன் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை15

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத் திய மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்ட பத்தில் மன்றத் தலைவர் நா.அரிகரதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவகற்கைகள் துறைத் தலை வர் ரி.இரவீந்திரன் பிரதம விருந்தினராக வும் தீவகக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.ஸ்ரனிஸ் லாஸ் சிறப்பு விருந்தினராகவும், ஓய்வுபெற்ற அதிபர் சு.வேலாயுதபிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (1-250)

* * *

நல்லூர், ஜூலை15

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகரசபை முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குச் சுங்கிலியன் வீதி பாலர்பாடசாலை விளை யாட்டு மைதானத்தில் நடைபெறும்.

யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்து கொள்வார். (1-111)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை15

சாவகச்சேரி நகரசபையின் மட்டுவில் தெற்கு கலைமகள் முன்பள்ளிச் சிறார்க ளின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு முன் பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறு முகம் தலைமையில் நடைபெறும் இப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக் கள சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசனும், சிறப்பு விருந்தி னராகத் தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கிய ராஜாவும் கலந்து கொள்வர். (1-207)

# நலன்புரி நிலையங்களிலுள்ள கர்ப்பிணிகளுக்கு உதவ ஏற்பாடு

நல்லூர், ஜூலை 15

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள கர்ப் பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்க ளுக்குத் தேவையான சத்துணவுப் பொருள் களை வழங்க இந்து அமைப்புகளின் ஒன் றியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இராமாவில், மிருசுவில், கொடிகாமம் அ.த.க. பாடசாலை, சித்தமருத்துவம், கோப் பாய், பனை அபிவிருத்திச்சபை பி.ஆர்.ஐ1, பி.ஆர்.ஐ.2 ஆகிய ஏழு நலன்புரி நிலை யங்களிலும் சுமார் 153 கர்ப்பிணிப் பெண் களும் 727 பாலூட்டும் தாய்மார்களும் தங் கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து அமைப்புக்களின் ஒன்றியம் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள கண்பார்வை குறைந்த 38 பேர்களுக்குக் கண் ணாடி வழங்க லயன்ஸ் கழகத்தின் உத வியைக் கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (203- 111)

# சிறப்புச் சொற்பொழிவு

சிவலிங்க யோகேந்திரா நிலையத்தின் ஏற்பாட்டில் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்வு நல்லூர், ஆடியபாதம் வீதியில் அமைந் துள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத் தில் நடைபெற்று வருகிறது.

நாளை வியாழக்கிழமை காலை ''எங் கும் எதிலும் சக்தி'' என்னும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் ''சுந் தரமூர்த்தி நாயனாரின் பக்திநெறி'' என்னும் தலைப்பில் அருள்மொழித்தாசன் மு.குமார சாமி ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவு கள் இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை ''அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன், ''விநாயகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட அடியார் கள்'' என்னும் தலைப்பில் அருள் மொழித் தாசன் மு.குமாரசாமி ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (201)

# திருமுறை முற்றோதல்

அகில இலங்கை திருமுறை மன்றம் நல்லூர் தெற்கு ஸ்ரீகற்பக விநாயகர் ஆல யத்தில் நடத்திவரும் மூன்றாம் திருமுறை முற்றோதல் நாளை வியாழக்கிழமை நிறைவு பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு ஆலய பூசை இடம்பெற்று நாயன் மார் நால்வர், திருமுறைச் சுவடிகள் ஆகியவற் றுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று அழகிய சுந்தரமுத்து பல்லக்கில் எழுந்த ருளி வீதி உலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆலய அறங்காவலர் சபையினரின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலை மையில் நான்காம் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள் ளது. (201)

# மகாஜனக் கல்லூரியிலிருந்து 34 பேர் பல்கலைக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை15

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இருந்து 34 மாணவர்கள் பல் கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

கணித்துறை-05, உயிரியல்துறை -04, முகாமைத்துவம்-03, வணிகத்துறை-01, கலை-08, நாடகம்-09, நடனம்-03, சங்கீ தத்துக்கு ஒருவருமாக மொத்தம் 34 பேர் தெரிவாகியுள்ளனர். (204)

லங்கா அலுமினியம் இன்டஸ்ரீஸ் PLC

இயற்கையான நிறம், வெண்கலம் பூசப்பட்ட, பவுடர் பூசப்பட்ட (160 நிறங்களில்) அதிஉயர் அலுமினிய கதவுகள், யன்னல்கள், பிரிவினை பகுதிகள் (Partition) கடை முன் பக்கத்தில் (Shop Fronts) உருளக்கூடிய (Roller) கதவுகள் தயாரிப்பாளர்களான

நாம்

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

உங்கள் எல்லாவித அலுமினிய தேவைகளுக்கும், விற்பனையாளர்

குளோரி அலுமினியம்,
(GLORY ALUMINIUM)
இல: 96 A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு இலக்கம் : 0777- 686021 / 0777- 545751

# லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கு நட்டஈட்டைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் மேற்கொண்டுள்ளார்

யாழ்ப்பாணம்,ஜூலை15

1990ஆம் ஆண்டு முதல் பணிநிறுத் தப்பட்ட லங்கா சிமெந்து நிறுவனத்தைச் சார்ந்த பணியாளர்களுக்கான நட்டஈட்டுத் தொகையை வழங்க அந்த நிறுவனம் முன் வந்துள்ளதாக அதன் தலைவர் சிசிர ஜிநேந் திர பரணகம அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவிடம் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

1990ஆம் ஆண்டு முதல் பணிநீக்கம் செய்யப்பட்ட மேற்படி ஊழியர்களுக்கு 15 மில்லியன் ரூபா நட்டஈட்டை வழங்க மேற் படி நிறுவனம் முன்வந்திருந்த போதிலும் அந்த நிதி போதாது என ஊழியர்கள், தொழி லாளர் தீர்ப்புச்சபையில் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

2007ஆம் ஆண்டு இந்த ஊழியர்களுக்கு 28 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் பல் வேறு இழுபறி நிலைமைகள் காணப்பட்ட நிலையில் மேற்படி ஊழியர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தங்களது கோரிக்கையை முன் வைத்திருந்தனர்.

அமைச்சர் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சருடனும், தொழில் அமைச்சருட னும், லங்கா சிமெந்து நிறுவனத் தலைவருட னும் கலந்துரையாடியமைக்கு இணங்க மேற்படி நிதியைக் கட்டம் கட்டமாக மாதம் 4 மில்லியன் ரூபா வீதம் செலுத்தி முடிப் பதாக மேற்படி நிறுவனம் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தாவிடம் உறுதிமொழி வழங் கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் டெங்கு நோய் ஆபத்திலிருந்து தப்பிக்கொள்ளலாம்

இலங்கையின் பல மாவட்டங்களிலும் டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவியுள்ளது. இலங்கையில் இவ்வருடம் இதுவரை 170பேர் டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்துள்ளதுடன் 16ஆயிரத்து 179 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் தற்போது வரை இந்நோயின் தாக்கம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளது. யாழ்.மாவட்டத்தில் இதுவரை 09 பேர் மட்டுமே இவ்வருடம் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பரவலாகக் காணப்படுகின்றன. தற்போது நாட்டில் சுமுகநிலை ஏற்பட்டமையால் தென்பகுதியிலிருந்து தினமும் யாழ்.மாவட்டத்திற்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இங்கு வருவோரில் ஒருவர் டெங்கு நோய்க்கிருமியுடன் வருகை தந்தால் இங்கும் இந்நோய் வேகமாகப் பரவி பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே டெங்கு நோயின் பரம்பலை யாழ்.மாவட்டத்தில் தடுக்க வேண்டுமாயின் இந்நோயைப் பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்த வேண்டும். டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை பொது மக்கள் தத்தமது வீடுகளிலும், சுற்றாடலிலும் அழிக்க வேண்டும். பாடசாலைகளில், நிறுவனங்களில், பொது இடங்களில் சிரமதானம் மூலம் இவை அழிக்கப்பட வேண்டும்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் மலேரியா தடை இயக்கத்தைச் சேர்ந்த பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களும் ஏனைய களப் பணியாளர்களும் வீடு வீடாகச் சென்று வீட்டுச் சுற்றாடலைப் பார்வையிட்டு இது சம்பந்தமான ஆலோசனைகளை.வழங்கி வருகின்றனர். அவர்களது ஆலோசனைப்படி நடந்து ஒத்துழைப்பு வழங்கி டெங்கு நோயை கட்டுப்படுத்த உதவுமாறு வேண்டுகின்றோம்.

இதேவேளை டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த தவறுபவர்களுக்கு எதிராக கடும் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் கூடுதலான அபராதமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படலாம். பல மாவட்டங்களில் இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின் றன. ஆனால் யாழ்.மாவட்டத்தில் இச்சட்ட நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க விரும்பவில்லை. பொதுமக்களின் ஒத்துழைப்புடனேயே நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்புகின்றோம். ஆனால் இதற்கு யாராவது ஒத்துழைக்கமறுத்தால் சில தனி நபர்களின் தவ றுகளால் ஒரு சமூகம் பாதிக்கப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

சட்டத்திலுள்ள பிரதான முக்கிய அம்சங்கள்

1.சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான அதிகாரம் அந்தப்பகுதியின் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. நுளம்பினால் பரவும் நோய்களைத் தடுப்பதற்கும் இல்லாது ஒழிப்பதற்கும் பின்வரும் கடமைகளை வீட்டு/ வளவு உரிமையாளர்/ குடியிருப்பாளர் மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

a.திறந்த நிலையிலுள்ள தகர டப்பாக்கள்,போத்தல்கள்.தேங்காய் சிரட்டைகள்,கோம்பைக[ள்,டய]ர்கள் மற்றும் நீர் தேங்கி நிற்கக்கூடிய சகல கொள்கலன்களும் அகற்றப்பட்டு/ அழிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

b. நீர் வழிந்தோடும் பீலிகள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவை நீர் தடையின்றி ஓடும் வகையில் பேணப்படல் வேண்டும்.

c. நீர் தாங்கிகள், தொட்டிகள் மற்றும் குளிரூட்டி (A/C) ஒழுங்கான முறையில் சீரமைக்கப்பட்டு நுளம்புகள் உட்புகுந்து பெருகாதவாறு பேணப்படல் வேண்டும்.

d. கிணறுகள் மற்றும் கிணற்றுச் சுற்றாடல் சீராக்கப்பட்டு நுளம்புப் பெருக்கம் ஏற்படாதவாறு பேணப்படல்வேண்டும்.

e. நீச்சல்/ நீர்த் தொட்டிகள் கிழமைக்கு ஒரு தடவையாவது வெறுமையாக்கப்பட்டு துப்புரவு செய்யப்படல் வேண்டும்.

f. வீட்டு வளவினுள்/ காணியினுள் தேங்கும் நீர், நுளம்புகள் பெருகாதவாறு கிரமமான முறையில் அகற்றப்படல் வேண்டும்.

g. செடிகள், புதர்கள் மற்றும் நீர் தேங்கி நிற்க ஏதுவான சகல தாவரங்களும் மற்றும் அலங்காரத்திற்காக வீடுகளினுள் அல்லது வெளியில் பூங்கன்று வளர்க்கப்படும் பூச்சாடிகள் நுளம்புகள் பெருகுவதற்கு வாய்ப்பா[ன]வை. இவை நுளம்புகளின் பெருக்கத்[திற்]கு இடமளியாதவாறு பேணப்படல் வேண்டும். இல்லாவிடில் இவை அகற்றப்படல் வேண்டும்.

h. நீர் நிலைகளில் நீர்த்தாவரங்கள்/ நீர்க்களைகள்/ பாசிகள் இல்லாதவாறு பேணப்படல் வேண்டும்.

3. வளவுகள் அல்லது அவற்றினுள் காணப்படும் அல்லது பேணப்படும் எதுவும் நுளம்புப் பெருக்கத்திற்கு சாதகமானதென தகுதி வாய்நத அதிகாரிக்கு தோன்றுமிடத்து அவர் எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் குறித்த காலப்பகுதியினுள் திருத்தங்களை செய்யுமாறு சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு பணிக்கப்படும்.

4. நுளம்புப் பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகளை வைத்திருக்கும், இந்நிலைமைகளை இல்லாதொழிக்கத் தேவையான குறித்த நடவடிக்கைகளை மற்றும் மேற்கொள்ளாது இருக்கும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாவார்.

5.நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்படுமிடத்து ஆயிரம் ரூபாவிற்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான குற்றப்பணத்திற்கும் மேலும் தவறு தொடர்ந்து புரியப்படுமிடத்து குற்றத்தீர்ப்பின் பின்னர் இத்தகைய தவறு தொடர்ந்து புரியப்படுமாயின் ஒவ்வொரு மேலதிக நாளுக்கும் நூறு ரூபா குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கி யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய் பரவாது கட்டுப்படுத்த அனைவரும் உதவவேண்டும்.

வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

## காணாமற் போனோரின் உறவினர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 15

அண்மைக் காலத்தில் குடாநாட்டில் காணாமல் போனவர்கள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காகக் காணாமற் போனவர்களின் உறவுகளை யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள ஈரோஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் செயலாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

## மகுடவாக்கியத்திற்கு அபிப்பிராயம் கோரல்

கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு கொடி உருவாக்கப்படவுள்ளதால் அதற்கான மகுட வாக்கியம் மக்களிடம் இருந்து பெறப்படவுள்ளது. எனவே மக்கள் தமது அபிப்பிராயத்தை எழுத்து மூலம் கைதடி முதியோர் இல்லத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)


DISTRICT SECRETARIAT, JAFFNA.
**INVITATION FOR BIDS**
**VADAKKIN WASANTHAM DEVELOPMENT PROGRAMME**
**180 DAYS.**

1. **The Chairman, District Procurement Committee, Department of Buildings,** now invites sealed bids from eligible and qualified bidders for the under mention works. The construction period is 90 days.

| No | Description of Work | ICTAD Grade | Estimated cost | Bid Security |
|---|---|---|---|---|
| 1 | Repairs to Ward No.1 At Ayurvedha Hospital, Kaithady. | C7/M6 | 5,819,000.00 | 117,000.00 |
| 2 | Repairs to Maternity Ward at Ayurvedha Hospital, Kaithady. | C7/M6 | 5,567,000.00 | 114,000.00 |
| 3 | Repairs to Ward No.11At Ayurvedha Hospital, Kaithady. | C9/M8 | 1,666,000.00 | 34,000.00 |
| 4 | Construction of single storeyed Ambulance Garage | C10/M9 | 751,000.00 | 15,000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding procedure.
3. To be eligible for contract award the successful Bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade, mention in the above table with the Institute for contruction Training and Development (ICTAD).
4. Interested Bidders may obtain further information from the chief Engineer's office (Jaffna), Department of buildings, Beach Road, Gurunagar, Jaffna and inspect the Bidding documents at the same address on any working day from 9.00 hrs to 16.00 hrs. Contact numbers are : phone :021 222 2781 Facsimail :021 222 2781
5. A complete set of Bidding Documents in English Language may be purchased by interested bidders on the submisstion of a written application to the **chief Engineer (Jaffna), Department of buildings,** from 15/07/2009.until 22/07/2009, between 9.00 hrs. to 15.00 hrs. upon payment of non refundable fee of Rs. 1000/- (One Thousand Rupees.).
6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, District Procurement Committee, Chief Engineer's Office, Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna** at or before 10.00 hrs. on 24.07.2009.
7. All bids shall be accompanied by a Bid Security for an Amount mention in the above table which should be valid up to **23.10.2009.**
8. Bids shall be valid for a period of 63 days from the deadline for submission of Bids.
9. Bids will be opened soon after closing in the presence of bidders or their authorized representatives at the **Chief Engineer's Office (Jaffna), Department of Buildings, Beach Road, Gurunagar, Jaffna.**

**Chief Engineer's Office,**
Department of Buildings (Central),
Beach Road, Gurunagar,
Jaffna.
www.cejffb@sltnet.lk

**K.Ganesh**
Chairman,
District Procurement Committee.

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

**வரலக்ஷ்மி விரத அறிவித்தல்**

எதிர்வரும் 31.07.2009 அன்று எமது ஆலயத்தில் வழமை போல் வரலக்ஷ்மி நோன்பு அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்நோன்பிற்கான நூல் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆலய காரியாலயத்தில் தொடர்புகொண்டு உங்களது பெயர், நட்சத்திரங்களை முற்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

குத்துவிளக்கு, நிறைகுடம் வைத்து வழிபாடு செய்யும் அடியார்கள், குறிப்பிட்ட அளவு பதிவுகளே இவ்வழிபாட்டிற்கு மேற்கொள்ளப்படவுள்ளதால் 25.07.2009க்கு முன்னர் இப்பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். இவ்வழிபாட்டிற்காக கொண்டுவர வேண்டிய பொருள் விவரங்களையும் ஆலய காரியாலத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

**வரலக்ஷ்மி உற்சவம் 31.07.2009 வெள்ளி**

காலை 7.00 மணி ஸ்நபன அபிஷேகம்
காலை 8.30 மணி மூலஸ்தான பூஜை
காலை 9.00 மணி வசந்த மண்டபப் பூஜை
காலை 9.30 மணி திருவிளக்கு, சுமங்கலிப் பூஜை

தொடர்ந்து அம்பாள் உள்வீதி, வெளிவீதி வீதியுலா.
அதனைத் தொடர்ந்து வரலக்ஷ்மி நோன்பு நூல் வழங்கப்படும்.

(87050) **தேவஸ்தானம்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**




அமரர் வினாசித்தம்பி கதிரேசு அமரர் தியாகராசா குருநாதன்

தோற்றம்: 10-04-1931 தோற்றம்: 17-09-1962
மறைவு: 26-06-2008

திதி: அட்டமி (15.07.2009

நேற்றெம் அருகிருந்த நித்திலமே!
ஆவி பிரிந்து ஆண்டொன்று ஆகியதோ?
வி[illegible] விட்டு கிளைபரப்பி

விழுது எறிந்து நிழல்தந்து நின்ற குடும்ப விருட்சங்களே!
நூறாண்டு சென்றாலும் நினைவிழந்து போகுமோ நெஞ்சு.

[illegible] கொக்குவில் மேற்கு, கொக்குவில். **குடும்பத்தினர்.**

(867045)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

08.07.2009 Continuity.....

### Spoken English Intensive Rhythm Drill.
### பேச்சு ஆங்கிலத்தின் - ஊக்கமிக்க ஓசைநயப் பயிற்சி

We have seen several techniques of fluency development by now. Of all these techniques, there is one technique that will need extended practice. This is the technique of speaking with the characteristic English rhythm. And this is a technique that will bring about a revoluntionary change in you. Once you get into the habit of talking with the characteristic English rhythm, you will find that a sizeable part of your fluency problem is over.

நாங்கள் பல வழிமுறைகளில் பேச்சுவளத்தை அதிகரிப்பதற்கான நுட்பங்களைப் பார்த்தோம். எல்லா நுட்பங்களிலும் ஒரு நுட்பத்துக்கு நீடித்த பயிற்சி தேவைப்படும். இது தனியான ஆங்கில ஓசை நயத்துடன் பேசும் நுட்பமாகும். இந்த நுட்பம் உங்களிடையே புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டுவரும். தனியான ஆங்கில ஓசைநயத்தில் பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்களானால், உங்களின் பேச்சுவள விருத்தி பிரச்சினை பெருமளவில் முடிந்துவிடும்.

You'll find below a collection of word groups for rhythm - drill. The word groups are all specially selected ones. They are word groups that come up very frequently during day to day conversations. They contain tricky sound - junctions too. Utter each word group rhythmically aloud several times.

கீழே தொகுக்கப்பட்ட பல சொற்கூட்டங்கள் உங்களின் ஓசைநயப் பயிற்சிக்கானவையாகும். இச் சொற்கூட்டங்கள் யாவும் விசேடமாகத் தெரிவுசெய்யப்பட்டவை. நாளாந்த உரையாடல்களில் அடிக்கடி வருபவை.

இவற்றுள் திறன்வாய்ந்த ஓசைச் சந்திகளும் உண்டு. ஒவ்வொரு சொற்கூட்டத்தையும் உரத்த குரலில் பலமுறை சொல்லிப் பழகுங்கள்.

| | | |
|---|---|---|
| 01. | He is in the / bath. | அவன் குளித்துக்கொண்டிருக்கிறான். |
| 02. | It can't be / done. | இதைச் செய்ய முடியாது. |
| 03. | She didn't / have a meal. | அவள் ஒரு சாப்பாடும் சாப்பிடவில்லை. |
| 04. | They're / drawing. | அவர்கள் வரைகிறார்கள். |
| 05. | I / want to / take a / week off. | நான் ஒருகிழமை விடுமுறை பெற விரும்புகிறேன். |
| 06. | I'm / glad. | நான் மகிழ்கிறேன். |
| 07. | It's / very / far. | அது மிகத் தூரத்தில் உள்ளது. |
| 08. | She's / nearly / ten. | அவளுக்கு பத்துக்குக் கிட்ட. |
| 09. | She / wants to / live in / comfort. | அவள் வசதியாக வாழ விரும்புகிறாள். |
| 10. | I / must be / going / now. | நான் இப்போது போகப்போகிறேன். |
| 11. | He / seems / nice. | அவன் பார்க்க நன்றாக இருக்கிறான். |
| 12. | Don't / make such a / noise. | அது போன்றதொரு சத்தம் போடவேண்டாம். |
| 13. | You have / got much / fatter. | நீர் மிகவும் கொழுத்து விட்டீர். |
| 14. | She's / over / fifty. | அவளுக்கு ஐம்பதுக்கு மேல். |
| 15. | It's / under / the / carpet. | அது கம்பளத்தின் கீழ் உள்ளது. |
| 16. | You will / see it / soon. | நீ அதனை விரைவில் பார்ப்பாய். |
| 17. | It's on the / desk. | அது மேசைமேல் உள்ளது. |
| 18. | They're / moving / on monday. | அவர்கள் திங்கட்கிழமை போகிறார்கள். |
| 19. | Nobody / ever / talks to them. | அவர்களுடன் ஒருவரும் பேசுவதில்லை. |
| 20. | Your / letter / disappointed / me. | உங்களுடைய கடிதம் என்னை ஏமாற்ற மடைய வைத்துவிட்டது. |
| 21 | He is / jealous / of your position. | அவன் உனது பதவியில் பொறாமையாக உள்ளான். |
| 22. | He has / got it / in his hand. | அவன் அதனை தன்னுடைய கையில் வைத்திருக்கிறான். |
| 23. | She / hasn't / made the / bed yet. | அவள் இன்னும் கட்டிலைச் சரியாக்கவில்லை. |
| 24. | It's / a / long / time. | இது அதிக காலத்துக்கு முந்தியது. |
| 25. | It's / under / the bed. | அது கட்டிலின் கீழ் உள்ளது. |
| 26. | She was / going / into / the shop. | அவள் கடைக்குள் போகிறாள். |
| 27. | This / cloth / tears easily. | இந்தப் புடைவை இலகுவாகக் கிழிந்து விடும். |
| 28. | We're / dancing. | நாங்கள் நடனம் ஆடுகிறோம். |
| 29. | I / had / a meal. | நான் சாப்பிட்டுவிட்டேன். |
| 30. | She / doesn't / much / care for / bathing. | அவள் குளிப்பதில் அதிக கவனம் எடுப்பது இல்லை. |
| 31. | This shirt / doesn't / fit me. | இந்த சேட் எனக்கு அளவில்லை. |
| 32. | There's / one / on the / right. | அங்கே ஒன்று வலது புறத்தில் உள்ளது. |
| 33. | He's / on the / platform. | அவன் மேடையில் உள்ளான். |
| 34. | The car's / broken / down. | இந்தக்கார் உடைந்துவிட்டது. |
| 35. | Explain / all these / things to him. | எல்லாவற்றையும் அவனுக்கு விளக்கமாகக்கூறு. |
| 36. | It's / rather / heavy. | இது மிகவும் பாரமானது. |
| 37. | Nobody / was / singing. | ஒருவரும் பாடவில்லை. |
| 38. | He is / jealous of his / friend. | அவன் தனது நண்பனில் பொறாமைப்படுகிறான். |
| 39. | I / guite / enjoyed / it. | நான் அதை மிகவும் இன்பமாக அனுப வித்தேன். |
| 40. | It / was an / amusing / story. | இது ஒரு கேளிக்கையான கதை. |
| 41. | I / heard / some / shouting. | நான் சில சத்தங்களைக் கேட்டேன். |
| 42. | I / went / into / the / library. | நான் நூலகத்திற்குள் சென்றேன். |
| 43. | It / is in / the cupboard. | அது அலுமாரிக்குள் உள்ளது. |
| 44. | She / refuses / to pay. | அவள் பணம்கொடுக்க மறுக்கிறாள். |
| 45. | Find / a / seat / for/ him. | அவனுக்கு ஓர் ஆசனம் பார். |
| 46. | They / formed / a / committee. | அவர்கள் ஒரு குழுவை அமைத் தார்கள். |
| 47. | Somebody / is / working. | யாரோ ஒருவர் வேலை செய்கிறார். |
| 48. | He / has / gone. | அவன் போய்விட்டான். |
| 49. | It's / not / necessary. | இது முக்கியமானதல்ல. |
| 50. | I / had / a very / pleasant / walk. | நான் ஒரு உல்லாசமான நடை நடந்தேன். |
| 51. | I / believe / so. | நான் அப்படித்தான் நம்புகிறேன். |
| 52. | The / food / has all / gone / bad. | உணவுகள் யாவும் பழுதாகிவிட்டன. |
| 53. | That / is / a / noisy / place. | அது ஒரு சத்தமான இடம். |
| 54. | She / is / rather / boring. | அவள் சலிப்படையச் செய்கிறாள். |
| 55. | This / seat / is / free. | இந்த ஆசனம் ஒருவரும் இல்லாமல் உள்ளது. |
| 56. | I / can't / stand the / pain. | என்னால் நோவைத் தாங்கமுடியாது. |
| 57. | I'm / on / the/ roof. | நான் கூரைமேல் உள்ளேன். |
| 58. | The / children / are / playing. | பிள்ளைகள் விளையாடுகிறார்கள். |
| 59. | She / jumped /on the / table. | அவள் மேசைமேல் குதித்தாள். |
| 60. | It / has become / much / warmer. | இது மிகவும் சூடாக வந்துள்ளது. |
| 61. | She / seems a / fool. | அவள் ஒரு முட்டாள் போலக் காணப்படுகிறாள். |
| 62. | He / shouted / her / name. | அவன் அவளுடைய பெயரைச் சத்தமிட்டுக் கூறினான். |
| 63. | They're / at / the / window. | அவர்கள் யன்னலடியில் உள்ளனர். |
| 64. | It's / in / her / hand. | அது அவளுடைய கையில் உள்ளது. |
| 65. | Keep / a / seat / for me. | எனக்கு ஒரு ஆசனம் வைத்திரு. |

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் புதன் கிழமை இலகுவழி ஆங்கிலம்-26 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி -
071-4273035,021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## "நமது வழிபாட்டுத்தலங்களிலுள்ள பெருமைக்குரிய அடையாளங்களை சிறுதொகைப் பணத்திற்காக விற்றலாகுமா?"





சித்திரைப் புத்தாண்டு என்றால் ஞாபகத்துக்கு வருவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழாதான். அப்படியொரு வரலாற்றுப் பெருமை அவ்வாலயத்திற்கு இருந்தது. ஏனெனில் புதுவருடத்தன்றே மருதடியிலும் தேரோடுவது வழமை. அதுதவிர கிழக்குப் பக்கம் நோக்கியிருந்த விநாயகர் சிலை திடீரென பலதசாப்தங்களுக்கு முன்னர் மேற்குப் பக்கம் திரும்பியதும் இதனுடைய மகத்துவத்தை இன்னும் அதிகரிக்கச் செய்திருந்தது. இதனால் புத்தாண்டில் இங்கு கூடும் பக்தர் கூட்டத்துக்கு அளவே இல்லை. அதையெல்லாம் 2004 ஆம் ஆண்டிலிருந்து அங்கு நடைபெற்றுவரும் புனரமைப்புப் பணிகளால் தற்போது காணமுடிவதில்லை. மேலேயுள்ள படங்கள் மேற்படி ஆலயத்தின் அழியாத நினைவுகள். ஆனால் இன்று காண முடியாதவை. [படமும் தகவலும்: பொ.சண்முகநாதன்]

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



இந்துக்களின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளில் ஒன்றான "படையல் வைத்தல்" முறையிலான வழிபாடு இன்னும் எம்மிடையே நடைமுறையில் இருக்கவே செய்கின்றது என்பதற்கு இப் படம் ஒரு சான்றாகும். வலி.வடக்குப் பிரதேசத்தில் உள்ள வயாவிளான் பகுதியில் உள்ள காளிகோயிலில் மக்கள் தம்முடைய வழிபாட்டு முறையில் பக்திபூர்வமாக படையல் செய்வதைப் படம் காட்டுகின்றது. (படமும் தகவலும் :- கலைஞன்)




படத்தில் இருப்பவரின் பெயர் 'வுக்கி•பலக்கிக்கிகே'. வட சீனாவிலிலுள்ள மங்கோலியாவில் சுயாட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் சாதாரணப் பெண் அல்ல. மண்ணை உண்ணும் மங்கை. வழமையாகவே மண் தின்னும் உடல் என்று வாழ்க்கையின் நிலையாமை பற்றிப் பேசுவோர் இந்தப் பெண்ணைப் பார்த்துத் தமது கருத்தைக் கொஞ்சம் மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும்.

இவர் தொடர்ச்சியாக இரண்டுமாதங்கள் தன்னுடைய முக்கிய ஆகாரமாக மண்ணை உண்டு கின்னஸ் சாதனை படைத்திருக்கிறார். இச் சாதனை 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிகழ்த்தப்பட்டது. எந்தப் பஞ்சம் வந்தாலும் இவரால் தாங்கிக்கொள்ள முடியும். ஏனெனில் மண்தான் எங்குமுள்ள பொருளாயிற்றே!

தொகுப்பு: ஔண்யன்



கடலில் உள்ள அதிசயங்களுக்கும் ஆச்சரியங்களுக்கும் குறைவே இல்லை. அதுவும் மூன்றுபக்கமும் கடலால் சூழப்பட்ட குடாநாட்டில் இத்தகைய கடலில் இருந்து பெறப்படும் அரிய வகையான பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை. இப்போது கடலில் சுதந்திரமாக நடமாடமுடிவதால் பெருமளவான சங்குகள், சிப்பிகள், சோகிகள், அலங்கார வடிவுடைய சிறு கற்கள், அழகியல் தன்மைகொண்ட இன்னும் பல கடல்சார் பொருள்கள் எல்லாம் நயினாதீவில் விற்பனைக்கு வந்துவிட்டன. இனிவரும் ... வரும் சுற்றுலாப்பயணிகள் மூலம் இவற்றை நல்ல விலைக்கு ... நம்பியிருக்கிறார்கள் இந்தச் சங்கு வியாபாரிகள். (படமும், தகவலும்:- லக்ஸ்மன்)



படத்தில் காணப்படுவது கலைநயத்தோடு செய்யப்பட்ட சதுரங்கக் காய்கள் என்று எண்ணினால் நீங்கள் ஏமாந்துதான் போவீர்கள். உண்மையில் இவை 150 வருடங்களுக்கு முன்னர் எமது முன்னோரின் போக்குவரத்துக்கு முதுகெலும்பாக விளங்கிய காளைகளின் கொம்புகளில் அணிவிக்கப்படும் பூண் ஆகும். பித்தளை உலோகத்தில் மிக நுண்ணிய கலை நயத்தோடு கூம்பு வடிவில் இத்தகைய பூண்கள் செய்யப்பட்டு காளைகளின் கொம்புகளில் பொருத்தப்படும். பூண்கள் பூட்டப்பட்ட மாடுகள் அவைகளது எஜமானர்களின் கௌரவத்தைப் பறைசாற்றும் வகையில் வெவ்வேறு தன்மையான பூண்கள் அக்காலத்தில் எம்மிடையே வழக்கில் இருந்தன. இப்போது அவை எல்லாமே வெறும் கதைகளில் மட்டுமே உலாவருகின்ற அதிசயப் பொருள்களாகிவிட்டன.

(படமும் தகவலும்: நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கும்போது சத்தமாகக் குறட்டை விடுதல் இருதய நோயுடன் தொடர்புபட்டது




குறட்டை விடுதல், இரவுத்தூக்கத்தை கெடுப்பதுமல்லாது, உயர் இரத்த அழுத்தத்தைத் தூண்டி விட்டு இருதய நோய்களைத் தோற்றுவிக்கும் சாத்தியமும் கொண்டது என சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

பலத்த சத்தமாகக் குறட்டை விடுதலும் இடையிடையே மூச்சு தாமதமடைந்து வெளிவருதலும் இருதய நோய் ஆபத்துச் சாத்திய அதிகரிப்புடன் தொடர்புபட்டிருப்பதாகக் கங்கேரி தேசத்தின் 'புடாபஸ்ட்' பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தமது ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளார்கள்.

தூங்கும்போது பலத்த சத்தமாகக் குறட்டை விட்டுத் தூங்குவதும், இடையிடையே மூச்சு தாமதமடைதலும் இருதய நோய் ஆபத்து சாத்தியத்தை அதிகரிக்கச் செய்வதுடன் தடைப்படும் தூக்கத்தின் அறிகுறியையும் சுவாசத்தில் குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது என எமது ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது என்கிறார் ஆய் வாளர் "ஸ்தவான் மஸ்ஸி".

12,643 கங்கேரி பொது மக்களை வைத்து நடத்திய ஆய்வில், குறட்டை விடாது தூங்கும் நபர்களுடன் ஒப்பீடு செய்யப் படும் வேளை, குறட்டை விட்டுத் தூங்குபவர் களில் 34 வீதத்தினர் அதிகரித்த இருதய நோய் பிடிக்கும் சாத்தியம் உடையவர்களாகக் காணப்பட் டனர். மேலும் 67 வீதமான நபர்கள் 'ஸ்றோக்' நோய் உருவாகும் சாத்தியமுடையவர்களாகக் காணப் பட்டனர் என 'சிலீப்' சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் வயது, பால், உடல் எடை, நீரிழிவுத் தாக்கம், கல்வி அறிவுமட்டம், புகைபிடித்தல், மது அருந்துதல் முதலிய காரணிகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.★★★ (நன்றி- குறொனிக்கல்)

## தகவல் பெட்டகம்



## புதன் பொல்கை

# மனமே சாய்ந்துவிடாதே!

இரா.சந்திரசேகர சர்மா (M.A.)

நாம் வாழும் பிரதேசங்களில் நடந்த சம்பவங்களினால் நெருக்கீடு ஏற்படுவதும், அதனால் உடல், உளத் தாக்கங்களும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்களும் ஏற்படுத்தும் இயற்கையானவையே. ஒரு வகையில் இவை வாழ்வுக்குத் தேவையானவை என்றே சொல்ல வேண்டும். சிலர் அதிக உணர்ச் சிகளுக்கு உட்படலாம். இத்தகைய உணர்ச்சிகள் ஏற்படுவதனால் நாம் அபாயகரமான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய சூழலில் இருந்து விலகித் தப்பிக் கொள்ளவும், தற்காப்பு முயற்சிகளை எடுத்துக் கொள்ளவும் உதவுகின்றன. இந்த உணர்ச்சிகளே நமது உளச் சமநிலையைப் பேணுவதற்கும் இயல்பான வாழ்க்கையை மீண்டும் பெற்றுத் தொடரவும் உதவுகின்றன. சில சந்தர்ப்பங்களில் நெருக்கீடுகள் தொடர்ந்து ஏற்படுகின்றன. மிகத் தாக்கமானவையாக இருக் கின்றன. எமது தாங்கும் சக்திக்கு அப்பால் சென்று பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவும் கூடும்.




எமது அனுபவங்களும், எதிர்கொள்ளும் தன்மைகளும், உணர்வுகளும், அவற்றை வெளிப்படுத்தும் முறைகளும் வெவ்வேறானவை; தனித்துவமானவையே. விளைவுகளையும் நெருக்கீடுகளின் காரணிகளையும் அறிந்து வைத்திருப்பது நல்லது; அவற்றைஎதிர்கொண்டுமீளஉதவும்

ஒரு போர்ச் சூழலில் எற்படுகின்ற நெருக்கீட்டின் விளைவுகள் பின்வருமாறு அமையலாம்;

★ பயம் - நாம் பாதிக்கப்படலாம்; நமது அன்புக்குரிய ஒருவர் பாதிக்கப்படலாம் என்ற பயம்.

*அன்புக்குரியோரைப் பிரிந்து தனிமைப்படுத்தப்படலாம் என்ற பயம்.

*நடந்தவை போன்ற நிகழ்வுகள் மீண்டும் நிகழக்கூடும் என்ற பயம்.

* மனம் பாதிக்கப்பட்டு நமது சமநிலையை இழந்துவிடக் கூடும் என்ற பயம்.

★ ஏக்கம் * இழந்தவற்றையும் பிரிந்தவர்களையும் எண்ணி எண்ணி ஏங்கித் தவித்தல்.

* மீண்டும் பழைய வாழ்க்கை வராதா என்றும் நம்பிக்கை அளிக்கக்கூடிய செய்திகளுக்காகவும் ஏங்குதல்.

★ கோபம் * நடக்கும் சம்பவங்கள் மீதும் அவற்றை உருவாக்குபவர்கள் மீதும் அடங்காத கோபம் ஏற்படலாம்.

* உயர் அதிகாரிகளின் மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகளாலும் நீதி, நெறிமுறையற்ற செயற்பாடுகளினாலும், பாரபட்சம் காட்டுவதாலும் கோபம் ஏற்படலாம். செல்வாக்கானவர்களை விட்டு விட்டு இடங்கண்டவர்களிடம் தனிமனித கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் வேண்டுமென்றே எடுக்கப்படும் நடவடிக்கைகளாலும் கோபம் ஏற்படலாம்.

* பொறுப்பில் உள்ளவர்களிடம் எவ்வளவு விளக்கியும் தான் புரிந்து கொள்ளப்படாமல் வேண்டுமென்றே புறந்தள்ளப்படும் போதும், அடங்காத கோபம் ஏற்படுகின்றது.

* இப்படியான பொறுப்பற்ற, நீதி நியாயமற்ற மேலிடங்களோடு வேலை செய்யும் போது உணர்ச்சிகளின் கட்டுப்பாடு குறைந்து உணர்ச்சிவசப்பட்டு சட்டென்று கோபப்படுகின்ற இயல்பு தோன்றலாம். பழைய துன்பமான நெருக்கீட்டு நினைவுகளும், கவலைகளும் இவற்றோடு சேர்ந்து கொள்ளும்.

★ குற்றவுணர்வு: * செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விட்டுவிட்டோமோ என்ற ஆதங்கம்.

* மற்றவர்களோடு பழகும் போது எல்லாவற்றிக்கும் தம்மீதே குற்றத்தைச் சுமத்திக்கொள்வது.

* எமது அன்புக்குரியவர்களை விட்டுவிட்டு நாம் மட்டும் தப்பிப் பிழைத்து வசதியாக இருப்பது பற்றிய குற்றவுணர்வு ஏற்படலாம். இது பெரும்பாலும் புலம் பெயர்ந்தவர்கள் அனுபவிக்கும் குற்றவுணர்வாகும். வயது போன தாய், தந்தையரை போர்ச்சூழலில் தவிக்க விட்டுவிட்டு தாம் மட்டும் வெளிநாடுகளில் காசு பணத்துடன் வசதியாக வாழ்கிறோமே என்ற குற்றவுணர்வும் அடிக்கடி ஏற்படும். தாய், தந்தையரின் இறப்பில் கூடப் பங்குபற்ற முடியவில்லையே; சமயக் கிரியைகளைச் செய்யவில்லையே என்ற குற்ற உணர்வு இறுதி வரை வாட்டியே தீரும். வர நினைத்தாலும் வர முடியாத நிலைமை ஓரளவு ஆறுதல் அளிக்கலாம்.

புலம் பெயர்ந்து வசதியாக வாழும் ஓர் அன்பு மகன் தனது தந்தையைத் தனியே யாழ்ப்பாணத்தில் விட்டு விட்டு வந்து விட்டோமே என்ற குற்றவுணர்வுடன் மனம் வருந்தி, யாழ்ப்பாணத்திற்கு வந்த ஒருவர் மூலமாக தனது தந்தையிடம் கொடுக்கும் படி விலையுயர்ந்த 'விஸ்கி' போத்தல் இரண்டை அனுப்பி வைத்தாராம்!★

# பார்வை கிடைத்தது



பார்வையிழந்த நபரொருவருக்கு அவரது முரசினூடாக மேற்கொண்ட புரட்சிகரமான அறுவைச் சிகிச்சை மூலம் பார்வையை மீளப்பெறச் செய்து பிரித்தானிய மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

மார்ட்டின் ஜோன்ஸ் (42 வயது) என்ற இந்த நபர், 12 வருடங்களுக்கு முன் உலோகப் பட்டறையொன்றில் பணியாற்றுகையில் உருகிய அலுமினியத்தைக் கொண்ட குழாயொன்று வெடித்துச் சிதறியதில் பார்வையை முற்றுமுழுதாக இழந்தார்.

இந் நிலையில், அவரைப் பராமரிக்க நியமிக்கப்பட்ட பெண்ணான கில் (50 வயது) என்பவரை நான்கு வருடங்களுக்கு முன்னர் மணந்தார்.

விபத்து நடைபெற்ற போது 600 பாகை செல்சியஸ் வெப்பநிலையிலிருந்த திரவ அலுமினியம் வெடித்துச் சிதறியதில் அவருக்குப் பாரிய எரிகாயங்கள் ஏற்பட்டன. 23 மணி நேரம் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த அவரது இடது கண் முற்றாக அகற்றப்பட்டது. அவரது வலது கண் அகற்றப்படாத போதும் அது பார்வைப்புல ஆற்றலை இழந்திருந் தது.

இந் நிலையில் மருத்துவர்கள் மார்ட்டினின் பற்களில் ஒன்றை அகற்றி, முரசினூடாக சிறிய துளை இட்டு விசேட பார்வை வில்லைகளை அவரது வலது கண்ணில் பொருத்தி அவருக்கு அக் கண்ணின்மூலம் பார்வைப் புலத்தை மீளக் கிடைக்கச் செய்துள்ளனர். அத்துடன் அவரது அகற்றப்பட்ட பல்லும் வெற்றிகரமாக மீளவும் உரிய இடத்தில் பொருத்தப்பட்டது.

இது தொடர்பில் மார்ட்டின் விவரிக்கையில், "நான் குருடாக இருந்தபோதே எனது மனைவியைச் சந்தித்தேன். அவர் முகத்தைப் பார்க்கவேண்டுமென்பதே எனது தீவிர ஆவலாக இருந்தது. மருத்துவர்கள் கண் கட்டை அவிழ்த்ததும் எதிரே நின்ற அவரை (மனைவியை) பார்க்க முடிந்தது. என்னால் நம்ப



முடியவில்லை. கில் மிகவும் அழகாக இருக்கிறார். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி உணர்வை விபரிக்க வார்த்தைகளில்லை" என்று கூறினார். ★★★★★★★★★★★★★★★

# சந்திரனில் கண் வைக்கும் நாசா

சந்திரனுக்கு 1960 களிலேயே மனிதனை அனுப்பவிட்டதாகச் சொல்லும் அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா தற்போது சந்திரன் பற்றிய தகவல்களை விண்ணில் இருந்து கொண்டே சேகரிக்கவும், சந்திரனின் மேற்பரப்பில் மோதி அதன் போது பெறப்படும் மாதிரிகளில் இருந்து தகவல்களைச் சேகரிக்கவும் என்று இரு வேறு நோக்கங்களோடு இரண்டு விண்கலங்களை ஒரு உந்துகணையைப் பாவித்து சந்திரனை நோக்கி விண்ணில் ஏவியுள்ளது.

மேற்படி இரண்டு விண்கலங்களில் ஒரு விண்கலம் சந்திரனின் மேற்பரப்பில் இருந்து சுமார் 50 கிலோமீற்றர்கள் தொலைவில் சஞ்சரித்துக் கொண்டு, அதில் உள்ள 6 பிரதான உபகரணங்களைப் பாவித்து சந்திரனின் மேற்பரப்புப் பற்றிய தகவ்களை துல்லியமாகத் திரட்டி நாசாவின் எதிர்கால சந்திரனுக்கான பயணங்களுக்கு அவசியமான தகவல்களை வழங்கும். மற்றைய விண்கலம் 2200 கிலோகிராம்



எடை யுள்ள பொருளைச் சந்திரனோடு 9000 கிலோமீற்றர்கள்/ மணித்தியாலம் என்ற வேகத்தில் மோத விட்டு அதிலிருந்து பெறப்படும் தூசிகளை மற்றும் மாதிரிகளை ஆராய்ந்து அங்கு நீர், பனிக்கட்டி, நீராவி அல்லது நீரேற்றப்பட்ட கனிமங்கள் அல்லது காபன் சார் சேதன இரசாயணங்கள் இருப்பதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராய இருக்கிறது.

ஏலவே இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் சந்திரனுக்கு ஆளற்ற விண்கலங்களை அனுப்ப ஆராய்ச்சி செய்து வரும் நிலையில் நாசாவும் மீண்டும் சந்திரன் நோக்கி தனது கவனத்தை செலுத்த ஆரம்பத்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இது புதியதொரு நட்சத்திரப் போர்த்திட்டத்திற்கு வழிவகுக்காமல் விண் வெளியை உபயோகமான பாதையில் பாவிக்க அனுமதிப்பது அறிவியல் உலகுக்கு ஒரு அனுகூலமான விடயமாக அமையும் என்பதை எதிர்பார்க்கலாம். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம்
## கரவெட்டி
# கேள்வி அறிவித்தல்

01. வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலகத்தினால் கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி கோரப்படுகின்றது.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | வேலை விவரம் | இக்ராட் தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | JF/ADP/ MRISEP/01 | பொதுச்சேவை நிலையம் அமைத்தல் வதிரி பாதணி கைத்தொழில் நிலையம் | C8/M7 | 50,000.00 | 1,000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளைச் சகல கேள்விதாரர்களும் கொண்டிருக்கவேண்டும்.
   i. மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
   ii. ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல்வேண்டும்.
   iii. முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்பாடுகளை கொண்டிருத்தல் கூடாது.
   iv. ஒப்பந்தக்காரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்கவேண்டும்.
   v. கேள்விதாரர் VAT பதிவுசெய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவுசெய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்கவேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரரும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களும் மேலதிக விவரங்களையும் கேள்வி ஆவணங்களையும் இலவசமாகத் திட்டமிடல் கிளை, பிரதேச செயலகம், கரவெட்டியில் பரிசீலிக்கமுடியும். (தொடர்பு இல.: 021 2263258, 021 2264674).

04. கேள்வி ஆவணங்களை 15.07.2009 தொடக்கம் 30.07.2009 முற்பகல் 10 மணிவரை மீளளிக்கப்படாத கேள்வித்தொகையை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதேச செயலகம், கரவெட்டியில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைத் திட்டமிடல் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

05. மூடிய கேள்விகளை தலைவர், கேள்விச் சபை, பிரதேச செயலகம், கரவெட்டி என்னும் முகவரிக்கு 31.07.2009ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைப்பதுடன் உடனடியாகக் கேள்வி திறக்கப்படும். இந்த நேரம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்கமுடியும்.

06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

சி.சத்தியசீலன்,
தலைவர்,
பிரதேச செயலக கேள்விச் சபை,
பிரதேச செயலகம், கரவெட்டி.

பிரதேச செயலகம்,
கரவெட்டி.
2009.07.15.

(சி/559545)

# 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு
## தேவராசா கீர்திபன்



மண் மகிழ
16.03.1996

கண் நெகிழ
31.05.2009

கடந்த (31.05.2009)
ஞாயிற்றுக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது அன்புச்
செல்வன்
**தேவராசா கீர்திபன்**
அவர்களின் வீட்டுக்கிருத்தியக்
கிரியைகள் இன்று (15.07.2009)
புதன்கிழமை நண்பகல் 12
மணியளவில் எமது இல்லத்தில்
நடைபெறும். அத்தருணம்
தாங்கள் குடும்பசகிதம் வருகை
தந்து இந்த ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும், அதனைத்
தொடர்ந்து நடைபெறும்
மதியபோசனத்திலும் கலந்து
கொள்ளும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட
அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்).

**குடும்பத்தினர்.**
செட்டிசீமா வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.


(86937)

## யாழ் மற்றும் வடபகுதி மக்களின் நம்பிக்கைக்கு என்றுமே பாத்திரமாக விளங்குவது...

Duro SINCE 1980 30 YEARS OF EXCELLENCE

SLS 935 SYSTEM SLSI ISO 9001 CERTIFIED SLS 147

# டியூரோ
பீ.வீ.சி. குழாய்களும் அதன் பொருத்துகளும்


PVC Ball Cocks


COMER - Italy




SLS 147
டியூரோ தயாரிப்புகள் இலங்கை
தரக்கட்டளை பணியகத் தரச்சான்றிதழ்
அங்கிகாரம் பெற்று, நாடு முழுவதும்
அமோக விற்பனையில்
சிறப்புடன் விளங்குகின்றது.

விநியோகித்து சந்தைப்படுத்துவோர்:
டியூரோ பைப் இண்டஸ்ரியல் (பிரைவேட்) லிமிட்டட்
307, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு-13
தொலைபேசி : 2440759, 2440760, 2335636 பெக்ஸ்: 2437646

யாழ் :முகவர்
**"Ahiezer Suppliers"**
**Duro Jaffna Operation Centre**
289, பிறவுன் வீதி,
கலட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின் உடற்பயிற்சியின் சில காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## முன்பள்ளி விளையாட்டு விழா

தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளிகளுக்கிடையேயான குடும்ப விளையாட்டு நிகழ்வுகள் மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.பாக்கியராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் இ. ஸ்ரீஸ்கந்தராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்த விளையாட்டுப்போட்டியில் மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 9 (ஒன்பது) முன்பள்ளி மாணவர்கள் கலந்து விளையாட்டுகளில் பங்குபற்றினர். பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் விசேட பிரதிநிதியாக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளர் சூ.சாள்ஸ் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியதுடன் பாலர்களுக்கான பரிசில்களையும் வழங்கினார்.

நிகழ்வில் நன்றியுரையை மாதுமை முன்பள்ளியின் இயக்குநர் எஸ்.சிவகாந்தன் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (203-131)

## வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தை வீழ்த்தி வடமாகாணச் சம்பியனானது யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், ஜூலை 14

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாகாணச் சம்பியனாகியது.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் வவுனியா மத்திய மகா வித்தியாலய அணியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 10 ஓவர்கள் குறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஜெனோசன் 11 ஓட்டங்களையும், எட்வேட் எடிசன் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

57 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா மத்திய மகா வித்தியாலய அணி 9.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 42 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த மதுசன் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கோபிகன் 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், கஜன் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், திவாகரன் 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இந்தவெற்றியின் மூலம் வடமாகாணச் சம்பியனாக யாழ்.மத்திய கல்லூரி அணி தெரிவுசெய்யப்பட்டது. (4-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## திலக்சனின் துல்லியமான பந்துவீச்சின் மூலம் கொக்குவில் இந்துவை வென்றது மகாஜனா

யாழ்ப்பாணம், ஜூலை 14

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்திவரும் மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 108 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 47.5 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஜனார்த்தனன் 36 ஓட்டங்களையும், சிந்துஜன் 33 ஓட்டங்களையும், பிரசாந் 27 ஓட்டங்களையும், பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 54 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிலோஜன் 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் தனுஜன், புவிராஜ், தனுசிகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

184 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 16.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 75 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

காந்தீபன் 16 ஓட்டங்களையும் லோஜன் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 30 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த திலக்சன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 23 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் கஜந்தன் 5 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்டுகளையும், மோசிகீரன் 4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 6 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (4- 86)

## மாற்றுவலுவுள்ள மாணவர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகளில் சில

வலி.வடக்கு, ஜூலை 14

வலிகாமம் கல்வி வலயம், யாழ்ப்பாணம் கல்வி வலயம், தென்மராட்சி கல்வி வலயம் ஆகியவற்றிற்கு உட்பட்ட மாற்றுவலுவுள்ள மாணவ, மாணவிகளுக்கு இடையே வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் பா.விக்கினேஸ்வரன் தலைமையில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

**10வயதின் கீழ்**

**50 மீற்றர் ஓட்டம்**

ஜெ.தமிழரசி, ஜெ.லோகேஸ்வரி, க. சதுரிக்கா (மூன்று இடங்களும் - வாழ்வகம்), தே.றொபட்சினி (உடுவில் ஆர்க் பாடசாலை), பி.ஜனனி (உடுவில் ஆர்க் பாடசாலை), ச.மேரி செல்சியா (சிவபூமி பாடசாலை), டே.றஜீவன் (உடுவில் ஆர்க் பாடசாலை), சு.சுலக்சன் (ஆர்க் பாடசாலை, தி.அஜன் (சிவபூமி பாடசாலை).

**75 மீற்றர் ஓட்டம்**

சி.தினேஸ் (கைதடி நவீல்ட் பாடசாலை), ஜெ.வசந்தகுமார், ஜெ.ராஜ்குமார் (வாழ்வகம்), டே. றஜீவன் (ஆர்க் பாடசாலை), ரா.சதீஸ் (சிவபூமி பாடசாலை), பா.சுரேன் (ஆர்க் பாடசாலை), ச. சுகன்யா (சிவபூமி பாடசாலை), தெ. வாகினி, நா.துஷ்யந்தி, ஆர்.திவ்வியா (வாழ்வகம்).

**100 மீற்றர் ஓட்டம்**

ஜெ.வசந்தகுமார், ந.தனேஷ், ஜெ. ராஜ்குமார் (வாழ்வகம்), த. தாசோதினி, ச. மயூரா (வாழ்வகம்), இ.ஜெனிஸ்டன், யோ. டிலாஜன் (ஆர்க் பாடசாலை), பா.சயந்தன் (சிவபூமி பாடசாலை), உ.வினோஜா (சிவபூமி பாடசாலை).

**பந்து எறிதல்**

டே.றஜீவன், ம.துஷ்யந்தன் (ஆர்க் பாடசாலை), பா.சாரங்கன் (சிவபூமி), க.மதுஷா (ஆர்க்), ச.நஜீபனா, யோ.நிஷா (சிவபூமி), ந.தனேஷ் (வாழ்வகம்), சி.தினேஷ் (கைதடி நவீல்ட்), ஜெ.வசந்தகுமார் (வாழ்வகம்), யோ.லோகேஸ்வரி, க.சதுரிக்கா (வாழ்வகம்).

**நின்று நீளம் பாய்தல்**

சி.தினேஸ் (கைதடி நவீல்ட்), ந.தனேஷ், ச.அமலாசன் (வாழ்வகம்), கே.தமிழரசி (வாழ்வகம்), ரா.சயந்தன், ரா.சதீஸ், உ. மதீசன் (சிவபூமி), ச.நஜீபனா, ச.சுகன்யா (சிவபூமி).

**தேசிக்காய் கரண்டி**

சு. சுலக்ஷன் (ஆர்க்), த. பிரதீபன், ஆ. கனிஸ்டன் (சிவபூமி), அ.சண்முகப்பிரியன் (ஆர்க்), நே.றொபெக்சினி (ஆர்க்), உ.வினோபா, ச.சுகன்யா (சிவபூமி), ச.அமலாசன் (வாழ்வகம்), த.தர்சோதினி, எஸ் மயூரா, ஜே.தமிழரசி (வாழ்வகம்).

**போத்தலில் நீர் நிரப்புதல்**

து.விதுர்சிகன், பா.சாரங்கன் (சிவபூமி), தே.பிரணவன் (ஆர்க்), தே.றொபக்சினி (ஆர்க்), ச.மேரிசெல்சியா (சிவபூமி), வி. மிகுந்தலா (ஆர்க்).

**பழம் பொறுக்குதல்**

பி.சுரேன், யோ.டிலாகன் (ஆர்க்), சி. அஜன் (சிவபூமி), க.மதுஷா, வி.மிகுந்தலா (ஆர்க்), ச.மேரி செல்சியா (சிவபூமி).

**சோடி சேர்த்தல்**

யோ.டிலாசன், ரா.சதீஸ் சு.சுலக்சன் (சிவபூமி), உ.வினோஜா (சிவபூமி). (50- 86)



உடுப்பிட்டி, இமையாணன் மேற்கு விநாயகர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச சபை சனசமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சுப்பிரமணியம், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்க முகாமையாளர் எஸ்.குகதாசன் ஆகியோருடன் விநாயகர் பாலர் பாடசாலைத் தலைவி திருமதி சிவதர்ஷினி நிற்பதையும் விநோத உடைப் போட்டியில் பங்குபற்றிய பாலர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை15

யாழ்.நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி (பேச்சி) அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றதுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக் குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நண்பகல் 12 மணிக்கு ஆடிப்பூரத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு அன்னாபிஷேகமும் அன்னதானமும் இடம்பெறும். (201)

* * *

குருநகர், ஜூலை15

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை காலை 6 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளன. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் அன்று பிற்பகல் 5 மணி தொடக்கம் தினமும் செபமாலை ஆராதனைகளுடன் நடைபெறும்.

எதிர்வரும் சனிக்கிழமை காலை 6 மணிக்கு சிறுவர் - சிறுமியர்களுக்கு முதல் நன்மை வழங்கப்படும். எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நற்கருணைத் திருவிழாவும் மறுநாள் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருவிழாத் திருப்பலிகளும் மாலையில் புனிதரின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும்.

அன்று காலை 5.15 மணிக்கு முதலாம் திருப்பலியும் தொடர்ந்து காலை 6.45 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருவிழாத் திருப் பலியும் இடம்பெறும். புனிதரின் திருச்சொரூப பவனி அன்று மாலை 4.30 மணிக்கு நடை பெறவுள்ளது. (201-51)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை15

காரைநகர் திண்ணபுரம் சிவன் ஆலய (ஈழத்துச் சிதம்பரம்) வருடாந்தத் தேவி பெருந் திருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடை பெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்குக் கைலாச வாகனத் திருவிழாவும் எதிர்வரும் 21ஆம் திகதி ஆடி அமாவாசை விரத விசேட பூசையும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்குத் தேர்த் திருவிழா இடம்பெறும். மறுநாள் சனிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆடிப் பூரம், தீர்த்தத் திருவிழா ஆகியவை நடைபெறும். (201)

* * *

வண்ணை ,ஜூலை15

குருநகர், உத்தரியமாதா தேவாலயப் பெருந் திருநாள் நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்குப் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை விழா இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திருச்சொரூப தேர்ப்பவனி இடம் பெற்று இறுதியில் சொரூப ஆசீர் வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவெய்தும். (201-160)


## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சந்தைக்கு மிக அண்மையில் அமைதியான சூழலில் விசாலமான 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776916929 (87052)


## தவறிவிட்டது

இல.79, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13 என்னும் முகவரியுடைய கணேசபிள்ளை முகுந்தன் என்பவரது தே.அ.அ.(811670863V) இருபாலைக்கும் யாழ்.நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- கணேசபிள்ளை முகுந்தன்

ஆர்.வி.ஜி.மருந்தகம், இல.504 , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 8132, 021 222 2129

## ஆயுள்வேத பாதுகாப்புச்சபை அங்குரார்ப்பண நிகழ்வு

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கான ஆயுள்வேத பாதுகாப்புச் சபை அங்குரார்ப்பண நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சு.முரளீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆயுள்வேத வைத்தியர்கள் மற்றும் ஆயுள் வேதத்தில் அக்கறையுள்ளவர்கள் அனைவரும் இந்த வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (50)


## விற்பனைக்கு

கடைக்குரிய கண்ணாடி சோக்கேஸ் (மரம்), டபிள் பெட், சிங்கிள் பெட், கல்லுரல், ஆட்டுக்கல், வீட்டுக்குரிய மர அலுமாரிகள், பழுதடைந்த கதிரைகள் மற்றும் தளபாடங்கள், 3' 6'' x 6' மூன்று லாச்சி மேசை, கொங்கிறீற் அச்சுகள், புராதன பொருள்கள் பெரிய லேடீஸ்சைக்கிள் - ஜப்பான்(Japan) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:-தியாகு கலைக்கூடம் NAL/70, 944A பருத்தித்துறை வீதி, நல்லூர். T.P: - 077 2334197

## காணிவிற்பனை

